# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு2030 மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை(09-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:38


## தனங்களப்பு, சங்கத்தார் வயல் பகுதிகளில் மோட்டார் தாக்குதல்!

ஆனையிறவுக்குத் தெற்கேயும் தனங்களப்பு மற்றும் சங்கத்தார் வயல் ஆகியபிரதேசங்களில் உள்ள படையினரின் நிலைகள்மீதும் நேற்று முன்தினம் மோட்டார் மற்றும் பீரங்கி மூலம் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

படையினர் பதில் தாக்குதல் நடத்தி புலிகளின் பீரங்கித் தளங்கள், முகாம்கள் என்பவற்றை சேதமாக்கினர் என்றும் -

தனங்களப்பில் ரோந்து சென்ற படையினர் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றையும் வேறும் சில பொருள்களையும் கண்டெடுத்தனர் என்றும் -

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (இ-6)

## கைதானோரில் 50 பேர் தொடர்ந்து தடுத்துவைப்பு

கொழும்பு,ஜன.9

கடந்த வியாழன் இரவு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கொழும்பு மாநகரசபை மற்றும் தெஹிவளை - கல்கிசை மாநகரசபைப் பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைக ளில் கைது செய்யப்பட்டவர்களில் 50 தமிழ் இளைஞர்கள், யுவதிகள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள் ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# பூஸாவுக்கும் மற்றும் சிறைகளுக்கும் கைதிகளை மாற்றுவதற்கு நடவடிக்கை

## பொ.ஐ.மு. முக்கிய கூட்டம்

கொழும்பு,ஜன.9

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நிர்வாகக்குழுக் கூட்டமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டமும் எதிர்வரும் 14ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறவுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெறுவதாக இருந்த இந்தக் கூட்டம் பின்னர் ஒத்திப்போடப்பட்டதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அரசின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-6-க)



அப்ப மலையைக் கெல்லி எலியைப் பிடிச்ச கதை என்டு சொல்லுங்கோ......!

## தொல்லை தவிர்ப்புக் குழுக் கூட்டத்தில் களுத்துறைச்சிறை விவகாரம் ஆராயப்படும்

கொழும்பு,ஜன.9

**களுத்துறைச் சிறைச்சாலையில் இரு நாள்களாக இடம் பெற்ற மோதல்களைத் தொடர்ந்து அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் பூஸா உட்பட பல்வேறு சிறைகளுக்கும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. களுத்துறைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் 742 தமிழ் கைதிகளை இவ்வாறு இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.**

இந்த சிறைச்சாலையில் இடம் பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை நடத்தப்படும் என்று நீதி அரசியல் விவகார பதில் அமைச்சர் டிலான்பெரேரா தெரிவித்துள்ளார்.

அதேசமயம் நாளை திங்கள் கிழமை தொல்லை தவிர்ப்புக்குழுவின் கூட்டம் கொழும்பில் நடைபெறும்போது களுத்துறைச் சிறைக் கைதிகள் விவகாரம் ஆராயப்பட உள்ளது. நீதி அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜெயசிங்க இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஹற்றனில் 12 பேர் கைது

கொழும்பு,ஜன.9

ஹற்றன் மஸ்கெலிய அம்மன் கோயில் சுற்றாடலில் வெடிமருந்து பொருள்கள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து 12 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இந்தப் பன்னிரண்டு பேரும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5-150)

# காயமடைந்த நிலையில் வாகனத்தில் ஏற்றப்பட்ட சமயமும் எம்மை தாக்கினர்

### அதிகாரிகளின் நடவடிக்கை குறித்து கைதிகள் முறையீடு

கொழும்பு,ஜன.9

சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படும்போதும் சிறைச்சாலை வாகனத்தில் வைத்து சிறை அதிகாரிகளால் தாக்கப்பட்டோம்.

களுத்துறைச்சிறையில் இருதினங்களாக இடம்பெற்ற மோதல்களில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ் கைதிகள் இவ்வாறு தெரிவித் தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா கிளை அலுவலக இணைப்பு அதிகாரி எஸ்.சிறீதரன், விசாரணை அதிகாரி எம்.கே. எஸ்.பெரேரா மற்றும் கே.பி. அரம்பத் ஆகியோர் நேற்று வைத்தியசாலைக்குச் சென்று காயமடைந்த கைதிகளை பார்வையிட்டனர். அச்சமயமே கைதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர் என்று இணைப்பு அதிகாரி எஸ்.சிறீதரன் உதயனுக்கு தெரிவித்தார்.

சிறை அதிகாரிகள் தம்மை தாக்கியதை அடுத்தே தாம் அவர்களை தாக்கியதாகவும் -

பின்னர் சிகிச்சைக்காக தம்மை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் வாகனத்தில் வைத்தும் சிறை அதிகாரிகள் தம்மை மிக மோசமாக தாக்கியதாகவும் -

கைதிகள் தெரிவித்தனர்.

காயமடைந்த கைதிகளில் அனேகமானவர்கள் தலையிலேயே காயமடைந்துள்ளனர். ஒரு சிலருக்கு கை, கால் என்பவற்றில் முறிவு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார். (இ-6)

## இறுதிக் கிரியைகள் இன்று குமாருக்கு மாமனிதர் விருது

கொழும்பு,ஜன.9

வெள்ளவத்தையில் கடந்த புதன் கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் இறுதிக்கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளன.



அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பு 3, இராணி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று தகனக்கிரியைகள் கனத்தை இந்து மயானத்தில் இடம்பெறும்.

அதே சமயம் குமார்பொன்னம்பலத்துக்கு விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரனால் விடுதலைப் புலிகளின் உயர் விருதான மாமனிதர் விருது வழங்கப்பட்டுள்ளது என்று தமிழீழ தகவல் பிரிவின் லண்டன் தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

மாமனிதர் விருது வழங்குவது தொடர்பாக விடுதலைப்புலிகள் தலைவரினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து அந்த உன்னத இலட்சியத்துக்காக அரும்பணி ஆற்றிவந்த ஓர் அபூர்வமான மனிதனை நாம் இழந்துவிட்டோம். விடுதலைக்காக எரிந்து வந்த ஓர் இலட்சியச் சுடர் அணைந்துவிட்டது. பகைவனின் கோழைத்தனத்துக்கு தமிழினப்பற்றாளர் ஒருவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த கைதிகளின் மற்றும் சிலரின் விபரம்

கொழும்பு,ஜன.9

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கும் சிறைக்காவலர்களுக்கும் இடையில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இடம்பெற்ற மோதல்களில் மொத்தம் 42 கைதிகள் காயமடைந்துள்ளனர். மேலும் இருவர் உயிரிழந்தனர்.

* அந்தோனி பிள்ளை ஜேசுதாஸ் - வவுனியா.
* சிவரத்தினம் சிறீகுமார் (வயது 29), - மானிப்பாய் வீதி, மானிப்பாய் ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

*காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு:-*

6ஆம் திகதி காயமடைந்தவர்கள்.

* முத்துக்குமார் சந்திரகுமார் (வயது 36) - ஆஸ்பத்திரி வீதி, திருகோணமலை.
* ஜெரோமியஸ்சாள்ஸ் எட்வேட் (வயது 22) - மூதூர்.
* அச்சுதண்டபிள்ளை பாலச்சந்திரன் (வயது 29) - யாழ்ப்பாணம்.
* கனகலிங்கம் மோகன்தாஸ் (வயது 27) - வவுனியா.
* குருசாமி தமிழ்ச்செல்வம் (வயது 27) - விஸ்வமடு.
* பண்டாரி சந்திரகுமார் (வயது 19) - பட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
* கணேஸ் உதயநந்தன் (வயது 22) - ஆனைக்கோட்டை.
* சிறில் கெல்டன் நிரோஸ் (வயது21) - குருநகர்.
* சபாபதி சந்திரமோகன் (வயது 21) - புத்தளம் வீதி, சிலாபம்.
* சுப்பிரமணியம் ஏகாம்பரம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடலில் மீன்பிடிக்க அனுமதி மறுப்பு

வடமராட்சி,ஜன.9

வடமராட்சி வடக்கு கடற் பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு கடந்த 6ஆம் திகதி முதல் எதிர்வரும் 16ஆம் திகதிவரை அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக படை அதிகாரிகளால் கடற்றொழிலாளரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதி மறுப்புத் தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகள் வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரனிடம் முறையிட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளர் மேற்படி விடயம் குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார். (இ-5-173)

## நோர்வே அமைச்சரின் விஜயம் ஒத்திவைப்பு!

### திடீர் சுகவீனம் காரணம்

ஒஸ்லோ, ஜன.9

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு குறித்து ஆராய்வதற்காக இம்மாதம் 15ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவிருந்த நோர்வே வெளிநாட்டமைச்சரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நோர்வே வெளிநாட்டு அமைச்சர் கே.என்.யூரி நர்த் வெலபக் சுகவீனம் காரணமாக வெளிநாடொன்றில் சிகிச்சை பெற்று வருவதாலேயே அவரது இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியாக அரசு மற்றும் எதிர்க்கட்சிகளைச் சந்தித்து உரை

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வேகமாக விற்பனையாகின்றன

தீபம் பஞ்சாங்க நாள் கலண்டர்கள், மாதக் கலண்டர்கள் (விளம்பர வாசகங்கள் பொறிக்க இடம் ஒதுக்கப்பட்டவை), டயறிகள் (மூன்று அளவுகளில்).

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

### சிவன் மாளிகை லிமிட்டெட்

166, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2996

(72518)



## தவறிவிட்டது

06—01—2000 அன்று காங்கேசன்துறை கப்பல் போக்குவரத்து அலுவலகத்தில் எனது பச்சைநிறப் பயணப்பை தவறிவிட்டது. அதைக் கண்டவர்கள் கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திரு. ஜி. ஆறுமுகம்
ஈஸ்வரி ஹோமியோபதி மெடிக்கல் கிளினிக்
இல. 372, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (72521)


## REQUIESCAT

On this day of cremation of the remains of the assassinated

### Mr. Kumar Ponnampalam

We Patricians remember our eminent Old Boy, Praying for the repose of his soul. May the Lord grant him eternal rest and comfort his sorrowing dear ones.

Rector and the
Patrician Family.

(C/10546)

## யாழ். மாநகர சபையின் அனுதாபச் செய்தி

தமிழ் இனத்தின் துயர்துடைக்க அரும்பாடுபட்டு அப்பணியில் தமது இன்னுயிரையே அர்ப்பணித்த

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயலதிபர்

உயர்திரு.

### குமார் பொன்னம்பலம்

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாநகராட்சி மன்றப்
பிரதி முதல்வர்,
உறுப்பினர்கள் மற்றும்
பணியாளர்கள்.

(சி/10548)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 21 — 05 — 1953
உதிர்வு: 10 — 12 — 1999

அமரர்

### தில்லைநாதன் கதிர்காமநாதன்

(கனிஷ்ட நூலகர். யாழ். இந்துக் கல்லூரி)

மௌனமே உன் பண்பு
புன்முறுவல் உன் அழகு
பரிசுத்தம் உன் சிறப்பு
இல்லறத்தில் மூவிரண்டு ஆண்டுடனே
எமை விட்டுப் பிரிந்தனையோ!
ஆறுமோ எமதுள்ளம்.

குடும்பத்தினர்.

இல. 7, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [72527]

## நெடுந்தீவில் மாதாந்த உதவிப்பணம்

யாழ்ப்பாணம், ஜன. 9

நெடுந்தீவுப் பகுதியில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான கடந்த டிசெம்பர் மாதக் கொடுப்பனவு நெடுந்தீவிலுள்ள தபாலகத்திலும் ஏனைய இரு உப தபாலகங்களிலும் எதிர்வரும் 11ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடம் இந்த உதவிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு இம்முறை நிலுவையுடன் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 9

1996 ஆம், 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பட்டதாரிகளாக வெளியேறிய— இதுவரை வேலை எதுவும் கிடைக்காத நிலையில் உள்ள — வேலையற்ற பட்டதாரிகளை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (க)


## A/L 2002

கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பமாகியுள்ளன.

C. MATHS
Mr. சிவலோகநாதன்
Mr. தவசேகர்
CHE.
Mr. அன்பு
PHY.
Mr. ஸ்பெல்மன்
BIO.
Mr. ஞானேந்திரன்
ENGLISH
Mr. இராஜேஸ்
I. Q.
Mr. தவசேகர்

SHAM ROCK

[சி/10547]



## நாகம்ஸ்
சுன்னாகம்

வினித், சுலக்ஷனா நடித்த

### ஆவாரம்பூ

காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
[72534]



## லிபேட்டி அச்சுவேலி

சரத்குமார், தேவயானி நடித்த

### பாட்டாளி

(புதிய வெளியீடு)
T. P. 070-212223
070-212678
[72242]



## ராஜா
யாழ்ப்பாணம்

அஜித் - சிம்ரன் மற்றும் பலர் நடித்த

### அவள் வருவாளா

10.30, 2.00, 5.00
[சி/10486]


## பவளவிழா வாழ்த்துகள்!

07 - 01 - 2000இல் பவளவிழாக்காணும் எங்கள் அன்னை

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(J. P)

அவர்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/ மயிலிட்டி ரோ.க. வித்தியாலயம்,
மயிலிட்டி. (72525)

## 75 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

துர்க்கா துரந்தரி கலாநிதி

### செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்

அவர்களின் பிறந்தநாளில் பவள விழாவை மிகச் சிறப்பாகக்கொண்டாடும் இந்நாளில் ஸ்ரீமகாமாரி அம்பாள் அருளைப்பெற்று நீடூழி காலம் வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்து சமூகப்பணி, பொதுப்பணி ஆற்ற எல்லாம் வல்ல மகாமாரி அம்பாளை வேண்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

ஸ்ரீமகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(72526)


## ST. PATRICK'S COLLEGE
JAFFNA.

### VACANCY FOR TEACHER AND A/L STUDENTS (2002)

1. A full - time teacher to teach Drama & Theatre to A/L Classes and Tamil to O/L Classes.
2. A/L STUDENTS: There are vacancies in Bio - Science, Maths. Arts & Commerce streams. Please attach to your applications the marks of all three terms of yr. 11.

Apply before 14 - 01 - 2000

RECTOR

(C/10545)



## A/L அளவையியல்

2000 விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்
சனி, ஞாயிறு பி. ப. 3-00 — 4-00 மணி

2001 குறியீட்டு அளவையியல்
சனி, ஞாயிறு காலை 7-00 — 8-00 மணி

ஆசிரியர்:- வே. யுகபாலசிங்கம் M. A.

ஆரம்பம்:- 09 - 01 - 2000 (இன்று)

### பட்டப்படிப்புகள் கல்லூரி

57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக)

(72535)


## உரும்பிராய் லயன்ஸ் கழகம் கண்ணீர் அஞ்சலி

எமது கழக இயக்குநர் சபை உறுப்பினர் லஸ்லேன் உடுவிலை வசிப்பிடமாகக் கொண்ட

லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசமணி ஐயாத்துரை

07 - 01 - 2000 இல் மட்டுவிலில் காலமானார்.

அன்னாரது மறைவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரும்பிராய் லயன்ஸ் கழகம்
(10553)

# ஊர்காவற்றுறைக் கடலில் மீன்பிடிக்க
# குருநகர் மீனவர்கள் பலர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 9

குருநகர் கடலில் தொழில் செய்வதில் ஏற்படும் சிரமங்களைத் தொடர்ந்து குருநகரிலுள்ள கடற்றொழிலாளர்கள் பலர் ஊர்காவற்றுறை கடலில் தம்மைத் தொழில் செய்ய அனுமதிக்குமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

ஊர்காவற்றுறையில் தங்கியிருந்து தொழில் செய்ய அனுமதிக்குமாறு கோரியுள்ள இந்தக்கடற்றொழிலாளர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டுவருவதாக உதவி அரசாங்க அதிபர் எவ். எக்ஸ். செல்வநாயகம் தெரிவித்தார்.

ஏற்கனவே குருநகரைச் சேர்ந்த ஐந்து குடும்பங்கள் ஊர்காவற்றுறையில் தங்கியிருந்து கடற்றொழில் செய்து வருவதாகவும் அவர் கூறினார். (ஐ-5-9)

## சங்கானை பிரதேச செயலர் பிரிவில்
# 3மாத நிலுவையுடன் 416 பேருக்கு பொதுசனமாதாந்த உதவிப்பணம்

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் புதிதாக பொதுசன மாதாந்த உதவிப் பணத்துக்கு விண்ணப்பித்த 416 பேருக்கு மூன்றுமாத நிலுவையுடன் பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் புதிதாக பொதுசன மாதாந்த உதவிப்பணத்துக்கு விண்ணப்பித்தவர்களை பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் அத்தாட்சிப் பத்திரத்தைப் பிரதேச செயலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அத்தாட்சிப்பத்திரத்தைப்பெற்றவுடன் குறிப்பிட்ட தபாற்கந்தோர்களுக்குச் சென்று கடந்த மூன்றுமாத நிலுவையுடன் உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பிரதேச செயலர் கா. சந்திரராசா தெரிவித்தார்.

பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் இருந்தும் 416 விண்ணப்பங்கள் சமூக சேவை உத்தியோகத்தர் கே.சிதம்பரநாதனால் தெரிவுசெய்யப்பட்டன. (இ-157)

# 637 குடும்பங்களுக்கு 5,000ரூபா கொடுப்பனவு

வலி. வடக்கு, ஜன. 9

நல்லூரர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 637 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட உள்ளது.

இப் பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களும்இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிக்கும் குடும்பங்களும் இவற்றில் அடங்கும்.

உரியவர்களுக்கான காசோலைகள் வங்கிகளுக்கு இவ்வாரம் அனுப்பி வைக்கப்பட உள்ளன. அவர்கள் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பெயரை உறுதிப்படுத்தி வங்கிகளில் பணத்தைப் பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீடு சேதமடைந்தவர்களில் மேலும் 100 பேருக்கு நஷ்டஈடு
## விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

வலிமேற்கு, ஜன. 9

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 1,500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தையுடைய அரசாங்க, அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் தவிர்ந்த ஏனையவர்களுக்கும் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களுக்கும் சேதமடைந்த வீடுகளுக்கான ஒரு லட்சம் ரூபா வரையிலான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக 100 பேருக்கு நஷ்டஈட்டை வழங்குவதற்கு பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரதேச செயலர் கா. சந்திரராசா விண்ணப்பதாரிகளை பின்வரும் ஆவணங்களைச்சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவத்துடன் விண்ணப்பப் படிவத்தின் இரண்டு நிழற்பிரதிகள்.உலர் உணவு நிவாரண 'உ' அட்டையின் மூன்று நிழற்பிரதிகள் விண்ணப்பதாரி தனது வீட்டுக்கு பிரதேச செயலகத்தில் இருந்து செல்வதற்கான பாதையின் வரைபடமும் அதன் இரண்டு நிழற்பிரதிகளும், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த அறிக்கையும் அதன் இரண்டு நிழற்பிரதிகளும், வாக்காளராக பதிவு செய்த விபரமும் அதன் இரண்டு நிழற்பிரதிகளும், வீடுசேதமடைந்த வீடமைப்புத் திணைக்கள உத்தியோகத்தரின் சேதமதிப்பீட்டு அறிக்கையும் அதன் இரண்டு நிழற்பிரதிகளும், காணி உறுதியின் மூன்று நிழற்பிரதிகள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் பிரதிகளும் கிராம உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

வீட்டின் சிவிய உரித்துடையவர்களும் உரிமையாளர்களின் சம்மதத்துடன் நஷ்டஈட்டுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார். (ஐ-175)

# உரக் களஞ்சியம், வீடுகள் ஊர்காவற்றுறையில் திறப்பு

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டமைப்புத் திட்டத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட வீடுகள் மற்றும் உரக் களஞ்சியம் போன்றவற்றை யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

கடந்த வாரம் இப்பகுதிக்கு விஜயம் செய்த யாழ். அரச அதிபர் மேற்படி திட்டத்தின் கீழ் கரம்பனில் 30 வீடுகளையும், மெலிஞ்சிமுனையில் 22 வீடுகளையும் நாரந்தனையில் உரக் களஞ்சியத்தையும் திறந்துவைத்தார்.

இந்த வைபவங்களில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எவ். எக்ஸ். செல்வநாயகம், சமூகசேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன் உட்படப் பல அரச திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (இ-5-8)

# அஞ்சல் அத்தியட்சகர் நியமனம்

திருநெல்வேலி, ஜன. 9

யாழ். மாவட்ட பதில் அஞ்சல் அத்தியட்சகராக சரவணமுத்து சுந்தரமூர்த்தி கடந்த மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் பதவி ஏற்றுள்ளார். இதற்கு முன் இவர் கடந்த எட்டு வருடங்களாக வட பிராந்திய பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவலக பதவி நிலை உத்தியோகத்தராகப் பணியாற்றி வந்துள்ளார்.

யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராகப் பணி புரிந்த சி. தர்மராஜன் தமது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்றுச்சென்றது தெரிந்ததே. (ஐ-135)

# நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

வடமராட்சி, ஜன.9

அம்பன் அரசினர் கிராமிய வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணி, வத்திராயன் ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இங்கு சிகிச்சை பெற வருவதினாலேயே நோயாளர்களது எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (ஐ - 173)

# மருந்து கொள்வனவு

வடமராட்சி, ஜன.9

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் பற்றாக்குறையாக உள்ள மருந்து வகைகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் தனியார் மருந்துக் கடைகளில் கொள்வனவு செய்து வழங்கியுள்ளது.

25 ஆயிரம் ரூபாவுக்கு பற்றாக்குறையாக உள்ள மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு தற்போது சிகிச்சையின்போது நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. (ஐ-173)

# சுகாதார நூல்கள்

வலிகாமம் தெற்கு, ஜன. 9

சுகாதார வைத்திய அதிகாரி ஆலோசகர் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் பாடசாலை நூலகங்களுக்குத் தேவைப்படும் சுகாதார சம்பந்தமான பல நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளில் இயங்கி வரும் நூலகங்களுக்கு வேண்டிய சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தகங்கள், சுகாதாரம் சம்பந்தமான சுவரொட்டிகள் என்பன வழங்கப்படுகின்றன. (ஐ-152)

## குமாருக்கு இரங்கல்
# யாழ். மாநகர உறுப்பினர் அஞ்சலி

யாழ்ப்பாணம். ஜன. 8

குமார் பொன்னம்பலத்தின் கொலைச் சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாநகர சபையின் சார்பில் அதன் உறுப்பினர் த. முகுந்தன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், சிறந்த சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

மிகவும் துணிச்சலுடன் தனது கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடுவதில் குமாருக்கு நிகரானவர்கள் எவருமேயில்லை. முன்னைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க செடி கொடி என சிறுபான்மையினரை விமர்சித்ததையும் சரி தற்போதைய ஜனாதிபதி தென்னாபிரிக்காவில் பீ பி. சிக்கு அளித்த பேட்டியில் தமிழர்களை வந்தேறு குடிகள் என விமர்சித்ததையும் மிகவும் துணிவுடன் சுட்டிக் காட்டி எதிர்த்த வீரமறவனை கோழைத்தனமாகச் சுட்டுக் கொலை செய்த சம்பவம் மன்னிக்க முடியாதது.

கடந்த 1994 பொதுத்தேர்தலில் 'சுயேச்சைக் குழு'வாக போட்டியிட்ட சமயத்தில் மிகவும் அந்நியோந்நியமாகப் பழகிய அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் அவரது சகாக்களுக்கும்இறைவன்தான் சாந்தியை அளிக்க வேண்டும். —என்றுள்ளது. (ஐ)

# ஈ பி. ஆர். எல். எவ்வின் பெருமாள் அணி கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன. 9

இக் கொலையைக் கண்டித்து ஈ பி. ஆர். எல். எவ். அமைப்பின் பெருமாள் அணியினர் விடுத்துள்ள செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது:-

குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மாறுபட்ட அபிப்பிராயங்களுக்காக ஆட்களைக் கொலை செய்யும் காட்டுமிராண்டித்தனம் எமது சமூகத்தில் அதிகரித்துள்ளது. சுதந்திரமாக கருத்துத்தெரிவிப்பதை இச்சக்திகள் அனுமதிப்பதில்லை. ஆகக்குறைந்த பட்சம் துப்பாக்கி ரவையை அல்லது மனித வெடிகுண்டைப் பாவிப்பதென்பது துரதிர்ஷ்டவசமாக2000 ஆம் ஆண்டிலும் தொடரவே செய்கின்றது.

அந்த அதிகாலை மங்களகரமாகத்தான் இருந்தது. தெஹிவளை ஆஞ்சநேயர் கோயில் தேர்த் திருவிழா இலங்கை வானொலியில் நேரடியாகஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. சில மணித்தியாலங்களின் பின் பிளவர் வீதியில் மனித வெடிகுண்டு ஒன்று உடல் சிதறி அப்பாவி மனித உயிர்களைக் காவு கொண்டது.

இன்னும் ஒரு சில மணித்தியாலத்தின் பின் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனுக்கு அண்மையில் வைத்து குமார் பொன்னம்பலம் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இன்று கொழும்பு நகரம் உடல் சிதறும் சன்னங்கள் பறக்கும் நரகமாக மாறியுள்ளது. இது இலங்கையின் நாகரிக உணர்வு கொண்ட சகல மக்களுக்கும் வெட்கத்தையும் வேதனையையும் ஏற்படுத்துவதாகும். இந்த வன்முறைக் கலாசாரம் என்ன விலை கொடுத்தாவது முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

கொழும்பில் வீடுகளில் இருந்து வெளியில் தொழில் நிமித்தமோ, வேறுகாரணங்களினாலோ வெளியில் செல்பவர்கள் உயிருடன் திரும்புவார்களா என்பது பெரும் கேள்வியாகவே மாறிவிட்டது.

இந்தப் பயங்கர நிலை தொடர்பாக ஜனநாயகம், மனித உரிமைகளில் அக்கறை உள்ள சக்திகள் வெறும் கண்டனத்துடன் நிற்காமல் வீதியில் இறங்கி எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோளாகும். (ஐ)

# மலையக முன்னணி கண்டனம்

மலையக மக்கள் முன்னணி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குமார் பொன்னம்பலம் அவர்களின் மரணம் எல்லா தமிழ் மக்களையும் பேரதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இவர் சிறந்த கல்விமான் சிறந்த சிந்தனையாளன்; சிறந்த தர்க்கவாதி வல்லமையுள்ள சட்டத்தரணியாக வெல்லாம் இருந்து விபத்தற்ற மனிதராக வாழ்ந்திருக்கின்றார்.

ஆயுதம் ஏந்தாமல்— போராட்டம் செய்யாமல் தனிமனிதனாக இருந்து ஜனநாயக ரீதியில் குரல் கொடுத்தே எல்லோரினதும் கவனத்தையும் ஈர்த்தவர்.

தனது கருத்தினை மிகத் துணிச்சலாக வெளிப்படுத்துவதற்குத் தயங்காதவராக வாழ்ந்தவர்.

இவரின் மறைவினால் ஏற்பட்ட இழப்பிற்கு மாற்றீடு கிடையாது.

இவரின் திடீர் மறைவினால் துயருறும் சகலருக்கும் மலையக மக்கள் முன்னணி ஆறுதலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றது. (ஐ)

# ம. ஜனநாயக பேரவை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 9

மக்கள் ஜனநாயகப் பேரவையின் தலைவர் நா. இ. இராமேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயலதிபர் குமார் பொன்னம்பலத்தின் இழப்பு தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். புகழ்பூத்த சட்ட வல்லுநர்களையும் புத்திஜீவிகளையும் நாம் இழந்துள்ளோம். அந்த வரிசையில் இன்று குமார் பொன்னம்பலத்தின் இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல எமது நாட்டிற்கும் மிகப்பெரிய இழப்பாகும்.

அண்மைக்காலமாக வடக்கு — கிழக்கு, மலையக மக்களின் ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு செயற்பட்டவரும் தமிழ் மக்களின் அவலங்களை வெளி உலகிற்கு எடுத்துரைப்பதில் முனைப்புடன் செயற்பட்டவருமாகிய குமார் பொன்னம்பலத்தின் மறைவு அனைவர்க்கும் அதிர்ச்சி அளிப்பதாகவே உள்ளது. அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கும் அவரது கட்சிக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் — என்றுள்ளது. (க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## சீருடை வழங்கல்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருள்களை வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் தகுதி வாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. கருஞ்சாம்பல் நிற காற்சட்டைத் துணி — 545 மீற்றர்
2. டி. ஐ. பாதணிகள் (அளவு 7, 8, 9) — 61 சோடி
3. நைலோன் சொக்ஸ் (கறுப்பு / பிறவுண்) — 61 சோடி
4. மழை அங்கி (பெரிது 40, மி. பெரிது-21)— 61 இல.

கேள்விப்பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப் பணமாக ரூபா 250 பெறுமதியான காசுக்கட்டளை/நுபாற் கட்டளை. நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் இணைக்கப்படல் வேண்டும். 6''X6'' மாதிரி சீருடைத்துண்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர், உறுதிசெய்யப்பட்ட கட்டளை வழங்கப்பட்டு மூன்று(3) வாரங்களுக்கிடையில் யாழ். பல்கலைக்கழக களஞ்சியத்தில் இவற்றை வழங்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ 25—01—2000 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

முகவரி:
**நிதியாளர்**
**யாழ். பல்கலைக்கழகம்**
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/10526)

## விடைத்தாள் திருத்தும்பணி ஆரம்பம்

அச்சுவேலி, ஜன 9

கடந்த மாதம் நடந்த ஜி. சி. ஈ (சாதாரண) தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த வியாழனன்று ஆரம்பமானது.

இந்தப் பணியில் எழுநூறு ஆசிரியர்களைக் கொண்ட 50 குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

யாழ். கல்வி வலயப்பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வரதராஜா ஆகியோர் விடைத்தாள் திருத்தும் பணியை மேற்பார்வை செய்து வருகின்றனர்.

இந்தப்பணி 10 தினங்கள் இடம் பெறும்.

(இ-3-11)

## காணி உறுதிகள் கையளிப்பு

நெடுந்தீவு, ஜன. 9

நெடுந்தீவில் 32 பேருக்கு சுவர்ணபூமி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி உறுதிகள் கடந்த புதன்கிழமை உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

சுமார் 20 வருடங்களுக்கு முன் வழங்கப்பட்ட இக்காணிகளுக்கான உறுதியை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் உரியவர்களிடம் கையளித்தார். காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அருணகிரிநாதனும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்.

(ஐ-111)

## வீதி திருத்தம்

குருநகர், ஜன. 9

யாழ்ப்பாணம் புல்லுக்குளத்துக்கு அருகில் செல்லும் முனியப்பர் கோயில் வீதியை செப்பனிடும் வேலையை யாழ். மாநகரசபை ஆரம்பித்துள்ளது. இவ்வீதியில் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

(ஐ-51)

## லைடனின் மலிவு விற்பனை

லைடனின் வாடிக்கையாளர்கள் பலரது வேண்டுகோளுக்கு இணங்க
**நத்தார் - புதுவருட மலிவு விற்பனை**
**தைப் பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது**
என்பதை அறியத் தருகின்றோம்.

★ எமது புடைவை நிலையத்தில் வாங்கும் ஒவ்வொரு புடைவைத் தினிசுகளுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம்**
**410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
T. P. 2381 (சி-10370)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
### அழைப்பு



தோற்றம்: 14 — 12 — 1919
மறைவு: 21 — 12 — 1998

## சாமிநாதக் குருக்கள் பஞ்சாட்சரக் குருக்கள்

நிகழும் பிரமாதி வருடம் மார்கழி மாதம் 25 ஆம் திகதி (09 - 01 - 2000) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் முதலாமாண்டு நினைவஞ்சலிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ப. விநாயகமூர்த்திக் குருக்கள்
(மகன்)
குடும்பத்தினர்.

சந்தையடி,
மானிப்பாய். (72371)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 18 — 03 — 1913
விண்ணில்: 21 — 12 — 1998

வட்டுக்கோட்டையூர்
வைத்திய மேதை சித்த வைத்திய கலாநிதி
அமரர்

## அ. க. காசிப்பிள்ளை

**திதி- திருதியை: 09—01—2000**

போற்றுதும் போற்றுதும் புண்ணிய முதலே!
ஆற்றல்சால் அண்ணல் அரும்பெருந் தலைவர்
மாற்றுயர் பொன்னே மாண்புயர் சிகரமே!
ஏத்துதும் ஏத்துதும் இணையடி மலரே!

காசி விசுவேசர் கருணை வழியில்
ஆசிலாய் நீயெமக் கருளிய பணியெலாம்
மாசிலா வகைதினை பானத்தவி சிறுத்தித்
தேசிக முதலே செய்து வருகின்றோம்.

பீடுயர் காசிப் பிள்ளையெந் தேவே
நீடும் இதயத்தே நிலவும் சோதியே
ஆடுங் கூத்தன் அருகில் அமர்ந்து
வாடும் எமக்கு நல் வளமெலாம் அருளே!

குடும்பத்தினர்.

சிவன் கோவிலடி
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை. (சி/10535)

## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.
## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விகள் எதிர்வரும் 14 - 01 - 2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே பி. ப. 2.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'தவிசாளர், வலி. கிழக்கு, பிரதேச சபை, நீர்வேலி' என்ற முகவரிக்கும் 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 14 – 01 - 2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | சிறுவர் பூங்கா அமைத்தல், இருபாலை | 2,000.00 | 500.00 |
| 02. | புனித திரேசா பெண்கள் பாடசாலைத் திருத்தம், அச்சுவேலி. | 500.00 | 150.00 |
| 03. | ஜனசக்தி சனசமூக நிலைய திருத்தம், புத்தூர். | 500.00 | 150.00 |
| 04. | சரஸ்வதி சனசமூக நிலைய பாலர் பாடசாலை தொடர் வேலை கோப்பாய் | 500.00 | 150.00 |
| 05. | நாமகள் சனசமூக நிலையத் திருத்தம், கோப்பாய். | 500.00 | 150.00 |
| 06. | ஞானவைரவர் சனசமூக நிலையத் திருத்தம், அச்சுவேலி. | 500.00 | 150.00 |
| 07. | உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் முதலாம் வீதி. | 1,500.00 | 300.00 |
| 08. | ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வீதி. | 2,000.00 | 400.00 |
| 09. | புத்தூர் சோமஸ்கந்தா பாடசாலை வீதி. | 1,750.00 | 350.00 |
| 10. | வாச்சா ஒல்லை ஒழுங்கை கோப்பாய். | 1,500.00 | 300.00 |
| 11. | நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வீதி. | 1,500.00 | 300.00 |
| 12. | பன்னாலை வீதி மதகு கொங்கிறீற் போடுதல் | 500.00 | 150.00 |

மேற்குறிப்பிட்ட வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 13 – 01 – 2000 ஆம் திகதி பி. ப. 12.30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ. ஞானசிங்கம்
தவிசாளர், ஜே. பி. யு. எம்.

வலி. கிழக்கு, பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
06 - 01 – 2000. (சி/10530)

# உதயன்

## களுத்துறையும் ஜனவரி பத்தும்!

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அரச அடக்குமுறைக்கு ஆரம்பகால அத்தாட்சியாகத் தோற்றும் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் இடம்பெற்று நாளையுடன் இருபத்தாறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

ஒருதலைப்பட்சமாக — ஈழத் தமிழர்களின் நலன்களுக்கு எதிராக — ஐக்கிய முன்னணி அரசினால் 1972 இல் — அறிமுகப்படுத்தப்பட்ட — இலங்கைக் குடியரசை நிறுவும் அரசமைப்பு, தமிழர்களை சட்டரீதியாகவும் இத்தீவில் மூன்றாந்தரப் பிரஜைகளாக்கி, அவர்களின் அடிப்படை உரிமைகளை — அரசியல் தனித்துவத்தை — அழித்தொழித்தபோது, தமிழர்களின் மிதவாதம், தீவிரவாத வழியை நோக்கித் திரும்பியது. அந்தக் காலத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளே தமிழர்களின் தீவிரவாதப் போக்கை ஆயுதப் போராட்டமாக மாற்றுவதற்கு வழி சமைத்தது என்கின்றனர் அரசியல் அவதானிகள்.

அப்போது ஆரம்பித்த அடக்குமுறைகளும் அதற்கெதிரான ஆயுதப் போராட்டமும் அழிவுகளும் இன்னும் அடங்கிவிடவில்லை. மாறாக விறுகொண்டெழுந்து கோரத்தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. அடக்குமுறையும் அதற்கு எதிரான கிளர்ச்சியும் கனன்று கொண்டிருப்பதை இந்தத் தலைமுறை நேரடியாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அனுமதி அளிக்க சிறிமாவோ அரசு முதலில் மறுத்தது. எழுச்சியையும் தடையையும் மீறி மாநாட்டை நடத்தும் உத்வேகம் தமிழர்கள் மத்தியில் எல்லைமீறிநிற்பதைக் கண்ட அரசு கடைசி நேரத்தில் — மூன்று தினங்களுக்கு முன்னர்தான் — அனுமதியை அளித்தது,

அப்படியும் கூட, அந்த மாநாட்டை — தமது மொழி குறித்த கருத் தாய்வை — தமிழர்கள் சிறப்புற நடத்திமுடிக்கவிடாமல் தனது பொலிஸை ஏவி, அதைக் குழப்பி பத்துப் பேரின் படுகொலைக்கும் அழிவுகளுக்கும் வழி செய்தது அப்போதைய அரசு.

அரசமைப்பு மாறிவிட்டது; அரசுக்கட்டில் மாற்றம் வந்துள்ளது. ஆனால் அதிகாரத்தனமும் அடக்குமுறை எண்ணமும் மட்டும் மாறியதாக இல்லை. களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அதற்கு ஓர் உதாரணம்.

அன்று மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட வேண்டிய பொலிஸார் தமிழாராய்ச்சி மாநாட்டிலே புரிந்த கொடுரத்தைக் கண்டோம். இன்று நீதியின் பெயரால் — நீதிமன்றங்களின் உப அமைப்பாகத் தொழிற்பட வேண்டிய சிறையில் அதன் காவலர்கள் புரியும் அநீதியைக் காண்கின்றோம்.

இதற்கிடையில் வெலிக்கடைப் படுகொலைகள், பூஸா சித்திரவதைகள், களுத்துறைக் கொடூரம் என்று பல சோகங்களை — அவலங்களை — தமிழ்ச் சமூகம் அனுபவித்துவிட்டது. என்றாலும் நீதிக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் அரச நிர்வாகத்தில் பெரிய மாற்றம் ஏதும் இல்லை.

இந்த நிலை எப்போது மாறும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்திருப்பது? இத்தகைய கொடுமைகளை நிறுத்தாது சமாதானமும் அமைதியும் எவ்வாறு வரும்?

## புங்குடுதீவுச் சம்பவத்துக்கு பல்கலை மாணவர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன. 9

புங்குடுதீவு அந்தணப்பெண் ச. சாரதாம்பாள் மீதான பாலியல் வல்லுறவு மிலேச்சத்தனமானது; இது மிகவும் வேதனையைத் தருகின்ற செயலாகும்.

இவ்வாறு புங்குடுதீவுப் பகுதியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட அந்தணப் பெண்ணின் படுகொலையைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இச் சம்பவம் குறித்து நாம் கடும் விசனத்துக்கு உள்ளாகியுள்ளோம். யாழ், வாழ் தமிழ் மக்கள் மீதான பல்வேறு காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்தமை யாவரும் அறிந்ததே. இந்த வகையில் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் இந் நடவடிக்கைகள் சம்பந்தமாக பலதரப்பட்டவர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக் காட்டியுள்ளோம். கடந்த காலப் பகுதியில் இடம்பெற்ற கொலைகள், பாலியல் வல்லுறவு மற்றும் காணாமற்போனோர் பற்றிய நடவடிக்கைகளால் மனமுடைந்து காணப்படும் மக்கள் மத்தியில் இவ்வாறான சம்பவங்கள் மேலும் வெறுப்பையே ஏற்படுத்துகின்றன. இச் செயலை மேற்கொண்டவர்களை உடனடியாக இனங்கண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

## மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் பாடசாலைகள் இணைப்பு

தென்மராட்சி, ஜன. 9

கல்வி மறுசீரமைப்பின் முன்னோடி நடவடிக்கையாக தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகள் அருகில் உள்ள பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

போக்கட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துடனும் —

வரணி ஸ்தான அமெரிக்கன் மிஷன் பாடசாலை வரணி இடைக்குறிச்சி அ.த.க. பாடசாலையுடனும் —

மந்துவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையுடனும் — இணைக்கப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் நா. சத்தியநாதன் தெரிவித்தார். (இ-117)

## பல நோக்குக் கூ. சங்கங்கள்

## கூட்டுறவுச் சமாசத்தில் கொள்வனவு செய்ய வேண்டும்

### கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன. 9

சகல ப.நோ. கூ. சங்கங்களும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சமாசத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்து விலைச் சமன்பாட்டைப் பேண வேண்டும்.

இவ்வாறு கடந்த வாரம் நடைபெற்ற சமாசத்தின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சமாசத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பொருள்களின் விலைச் சமனைப் பேணுவதுடன் நியாயமான விலையில் மக்களுக்குப் பொருள்களை விநியோகிக்க வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-5-9-10)

## திருவாசக முற்றோதல்

கொழும்புத்துறை, ஜன. 9

தொல்புரம் வழக்கம்பரை அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு 'திருவாசக முற்றோதல்' - ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சு. சுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

## பஸ் கட்டணத்தை இயன்றளவு சில்லறையாக வழங்கி உதவுக!

### பொது முகாமையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 9

வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணம் செய்வோர் பஸ் கட்டணங்களை இயன்றளவு சில்லறையாக வழங்க வேண்டும் என வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குடாநாட்டில் இன்று சில்லறைக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அனைவரும் அறிவர். இந்தத் தட்டுப்பாடு காரணமாகவே பயணிகள் பலரும் பஸ் கட்டணத்துக்காகச் செலுத்தும் பணத்தின் மிகுதியைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த சிரமங்களை ஓரளவு தீர்க்கும் வகையில் சகல நடத்துநர்களுக்கும் 25 ரூபா சில்லறையாக வழங்கப்பட்டுள்ளது. எனவே பயணிகள் அனைவரும் தம்மால் இயன்றளவு சில்லறையை வழங்கி நடத்துநர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## மாதாந்த உதவிப் பணம்

நவாலி, ஜன. 9

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவு பிரதேச செயலகத்தினால் சகல தபாலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று இவற்றைப் பெற்றுக்கொளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

## பாடசாலைகள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம் ஜன. 9

தற்போதைய சூழ்நிலை காரணமாக பாஷையூர்சென். அன்ரனீஸ் மகளிர்பாடசாலையும், கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயமும் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்துக்கு தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டிருக்கின்றன.

நாளை திங்கட்கிழமை முதல் மாணவர்களை அங்கு சமுகளிக்குமாறு அதிபர்கள் அறிவித்துள்ளனர். [ஐ]

# வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் சிறு துரும்பாக எதிர் நீச்சல் போடு!

எமது தேவைகளுக்கான தேடல் தொடர்கின்றது. எல்லாம் எமது வசதிக்காக, வாழ்வுக்காக, கௌரவத்துக்காக எமது தேடல் எந்த அளவுவரை எனக் கேட்டால் எல்லைகள் இல்லாத தூரம் தேடலாகவே தொடருகிறது. அதனால் இவ்வுலகில் தேடியவற்றைப் பாதுகாக்க முடியாமல் ஏங்கிடும் இதயங்களாக மனம் அங்கலாய்க்கிறது.

படைப்புக்கள் யாவையுமே மனிதனுக்காக இறைவன் படைத்தார். மனிதனின் மகிழ்வுக்காக மனித மீட்பைத் தரவே இறைவன் மனுஉரு எடுத்தார். அந்த மீட்பினைச் சுவைக்க பலரைத் தேர்ந்து எடுத்தார். அவர்களை திருமுழுக்கு வழியாக தம்பணிகளைப் பரவ பாமர மக்களையே தெரிந்து கொண்டார். அவர்களின் அழைத்தல் அவர்களோடு நின்றுவிடவில்லை. அதில் இன்று அகிலமே பரந்து திருமுழுக்கி

### ஞாயிறு நற்பிரசாதம்

னால் இணைந்து கொண்டதை எண்ணிப் பூரிக்கின்றோம்; புகழ்கின்றோம்; யூபிலி ஆண்டாகக் கொண்டாடுகின்றோம்.

இயேசுவின் திருமுழுக்கை நினைவு கூர்ந்து கொண்டாடுகின்றோம். இந்தச்சம்பவம் எதனை எடுத்துக்காட்டுகின்றது என்றால் இயேசு அன்றைய சமூக சீர்கேடுகளுடன் சமரசம் செய்து வாழவில்லை. திருமுழுக்கு வழியாகப் பெற்ற அருங் கொடையை ஒரு தனித்துவமான அழைப்பாக, மனிதனை மனிதனாக வாழ வைக்கும் பணியாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்து காட்டினார். அன்றும் பரிசேயர், சதுசேயர், சந்நியாசிகள், தீவிரவாதிகள் மத்தியில் சலிக்காமல் இறைசித்தத்தை நிறைவேற்ற திருமுழுக்கின் அழைப்பினை உணர்ந்து தனித்து நின்று சாட்சி பகர்ந்தார்.

இன்றும் தேடல்கள், தேவைகள் பெருகிவிட்டதால் எல்லாவற்றையும் சேகரித்து குவித்துக் கொண்ட போதும் எதனையோ தொலைத்து விட்டதை எண்ணித் தயங்குகிறோம்; மறைக்கின்றோம்; மறுக்கின்றோம்.

''உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் உன் ஆன்மாவை இழந்து விட்டால் அதனால் ஏது பயன்'' என்றுரைத்தவர் எம்மிடம் விட்டுச் சென்ற சமாதானத்தை வார்த்தைகளால் மட்டும் உரைத்துக் கொண்டு செயல்களால் எம் தேடல் பொருளாக, பணமாக, வசதியாக, கௌரவமாகத் தொடர்கிறது. அதனால் தான் தொலைந்து போன சமாதானத்தை தேட மறுக்கிறோம்; உள சுத்தமுடன் பாதுகாக்க முடியாது தவிக்கின்றோம்.''

''சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். என் சமாதானத்தையே உங்களுக்கு அளிக்கிறேன்.

''நான் தரும் சமாதானம் இந்த உலகம் தரும் சமாதானம் போல் அன்று'' என்ற அருள் நிறைந்த வார்த்தைகள் திருமுழுக்குப் பெற்று இறை உறவில் இணைந்தவர்க்குக் கிடைத்த நற்பிரசாதம். இதை மறந்து உலக இச்சைகளுக்கு அடிமையானதால் அனுபவிக்கும் அவலங்களே மிஞ்சியது. எம் வாழ்வை மீட்டுப் பார்க்க மீண்டும் ஒரு திருமுழுக்கு நாள் நினைவு கூரப்படுகிறது.

''என் அன்பார்ந்த மகன் நீயே உன்பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'' (மார். 1:11) என்ற வார்த்தை அர்த்தமுள்ளதாக்க அடித்துச் செல்லும் வெள்ளத்தில் அள்ளுண்டு போகாமல் சிறு துரும்பாய் ஆவது எதிர் நீச்சல் போட அழைப்பு விடும் காலமிதே.

திருமுழுக்கு வழியாக நாமும் இறைவனின் அன்புக் குழந்தைகளாக அங்கீகரிக்கப்பட்டோம். அந்தப் பெருங் கொடையை புனிதமாக ஏற்போம். இறை தந்தையின் அன்பும் ஆண்டவரின் அருளும் தூய ஆவியின் நட்புறவும் என்றும் இருக்க இறைவனைப் பிரார்த்திப்போம். ★

— அருட் திரு. அன்புராஜா அ. ம. தி

### நாளை

மார்கழி 26

திங்கட்கிழமை

திதி: சதுர்த்தி

வைகறை 5.16 வரை.

நட்சத்திரம்: அவிட்டம்

பிற்பகல் 3.12 வரை.

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 12.33—2.03

ராகுகாலம்: 8.03—9.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எந்த நிகழ்ச்சியும் நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோமோ அதன்படி நல்லதோ கெட்டதோ ஆகிறது.

— மார்க்க அரேலியர்

# கீதையைத்தந்த பகவான் கண்ணபரமாத்மாவிடம் கோதையவள்கொண்ட அழியாத்தெய்வீகக் காதல்!

**மகா** விஷ்ணு ஆலயங்களில் மார்கழி மாதத்தில் 'பாவை நோன்பு' மிகவும் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. திருமாலைத் தன் கணவராக மனத்திலே வரித்து, அவரையே பதியாக அடைய வேண்டுமென்று தவம் செய்து அவ்வெண்ணம் நிறைவேறப் பெற்றவள் தான் பெரியாழ்வாரின் புதல்வியாக வாழ்ந்த கோதை.

ஆன்மாவானது ஆண்டவனை அடையும் பக்குவத்தை எய்தியதும் அதாவது பக்குவ நிலை வந்ததும் இறைவனாலேயே தடுத்தாட்கொள்ளப் படும் பாங்கு அலாதியானது. அதை விளக்குவதற்கு கோதையின் இலட்சியம் நிறைவேறிய கதை உதாரணமாகும்.

இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற தன்மையினால் ''ஆண்டாள்'' எனப்பட்ட இவரின் திருப்பாவைப் பாடல்கள் படிக்குந்தோறும் பரவசமூட்டுந் தன்மை வாய்ந்தவை.

விஷ்ணு (பெருமாள்) கோயில்களில் இத் திருப்பாவைப் பாடல்கள் அதிகாலையிலேயே பக்தி மனங் கமழ ஒலிக்கும்போது நமது மனத்தில் உவகை துள்ளும்.

இறைவனைப் பாமாலைகளாலும் பூமாலைகளாலும் அர்ச்சித்து வழிபட்ட ஆழ்வார்களுள் மிகச் சிறப்புப் பெற்றவர் பெரியாழ்வார். அவரது திருமகள் தான் கோதை. வில்லிபுத்தூரில் அழகிய நந்தவனத்துள் ஆழ்வார் கண்டெடுத்து வளர்த்த பெண் குழந்தை ஆயர்பாடிக்கு அணி விளக்கான அழகிய கண்ணனை மனதில் வரித்தவள். அவனை அடைய வேண்டும் என்னும் இலட்சியத்தில் உறுதியாக நின்றவள்.

நந்தவனக் குழந்தையான கோதையை பூமாதேவியின் அவதாரம் என்றே தந்தை நம்பினார், குழந்தையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்த பெரியாழ்வார்தான் பூஜிக்கும் திருமாலை அவளுக்கு அறிமுகம் செய்கிறார். கண்ணனின் லீலைகளைக் கூறும் தந்தை மகளின் உள்ளத்தில் கண்ணன் மேல் அன்பை விதைத்து விடுகிறார்.

கோதை வளர்கிறாள்:

## ஆலயசக்தி
## உதயன் ஞாயிறு சிறப்பகம்

கூடவே கண்ணன் மேல் கொண்ட அன்பும் அவள் மனதில் வளர்கிறது. கண்ணனுடன் ஆடிப்பாடி மகிழ்வதாக எண்ணிக்கொள்கிறாள். மணல் வீடு கட்டி விளையாடுகிறாள்.

கொலுசு குலுங்க அவள் பூச்செடிகளுக்கு நீர் ஊற்றும் அழகில் தந்தை தன்னையே மறந்து விடுகிறார். அவள் இருக்குமிடமெல்லாம் அழகும் அன்பும், அறிவும் சுடர் விடுகின்றன.

காலம் ஓடுகிறது. கோதை வளர்ந்து 'கன்னியாகிறாள் கண்ணன் மேல் கொண்ட பாசம் காதலாகப் பரிணமிக்கிறது. மனிதப் பெண்ணான கோதை கடவுளான திருமாலைக் கணவனாக அடையும் இலட்சியத்தைக் கொண்டு தனது இலட்சியத்தில் உறுதியாகவும் நிற்கிறாள்.

அழகிய மலர்களால் மாலை தொடுத்து அதைக் கண்ணனுக்குச் சூடு முன்னர், அது அழகானதா என்று பார்க்கத் தனக்கே சூட்டி அழகுபார்த்த பின்பு தான் திருமாலுக்குச் சூடுவாள். அதனால் ''சூடிக் கொடுத்த நாச்சியார்'' என்ற பெயரும் இவருக்கு வழங்கலாயிற்று.

கண்ணன் மேற்கொண்ட காதலினால் அவள் இவ்வாறு செய்தபோது திருமாலும் அதை அன்போடு ஏற்றுக் கொண்டார். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் அன்புக்கு இணையே இல்லை.

மகளின் அற்புத அழகும் வளர்ச்சியும் பெரியாழ்வாரைக் கலங்க வைக்கிறது. அவள் தன்னை அழகுபடுத்தும் பாங்கினைக் கண்டு துன்பமடைகிறார் தந்தை.

மகளின் நிலைகண்ட தந்தை மணவாளனைத் தேடமுனைகிறார். ஆனால் மகளோ மானிடன் எவனையும் மணக்கமாட்டேன். அவ்வாறு ஏதும் நடந்தால் உயிர் வாழமாட்டேன் என்று உறுதியாக நிற்கிறாள்.

கோதையின் இலட்சியம் என்ன? உலகில் இல்லாத புருஷோத்தமனை மணம் செய்யவேண்டும்; அதுவும் அவனாக வந்து அவளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவள் விருப்பம். கடவுள்மேல் கொண்ட காதலால் அவள் துன்பமடைகிறாள்; காதலின் வேதனைகள் அவளை வாட்டி வதைக்கின்றன. தன்னை வந்து ஏற்றுக் கொள்ளுமாறு அவள் கண்ணனிடம் குயிலைத் தூது விடுகிறாள்.

**சி. புஷ்பா**

''காதலியோடு உடன் வாழ் குயிலே என் கரு மாணிக்கம் வரக் கூவாய்''

தனது இலட்சியம் நிறைவேறப் பாவைநோன்பு நோற்கிறாள். மார்கழிமாதம் முழுவதும் அவள் நோன்பு அனுஷ்டிக்கின்றாள். அதில் கண்ணனின் ஆயர்பாடியாக வில்லிபுத்தூரை நினைத்து விடுகிறாள். தன்னை கோபியர்களுள் ஒருத்தியாக நினைத்து விடுகிறாள். அன்பின் ஆழம் இதில் புலப்படுகின்றது. தன்னைத் தலைவியாகவும் கண்ணனைத் தலைவனாகவும் கொண்டு ஆண்டாள் விரதமிருக்கின்றாள். தன்னை மறந்த நிலையில் ஆண்டாள் பாவை நோன்பின் பலனை அடைகிறாள். தனது இலட்சியக் காதல் கை கூடிவிட்டதாக அவள் காணும் கனவைத் தன் தோழியருக்குச் சொல்லும் பாங்கில் அமைந்த ''நாச்சியார் திருமொழி'' அவளது இலட்சியத்தின் வெற்றியைப் பறை சாற்றுகின்றது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## தங்கத் தமிழ் மகனே!

பொன்னரில் உதித்த கருவே! குமாரெனும் திருவே!
கன்னங் கரும் தமிழா! போன இடம் தேடிப்
பொங்குகின்றோம்!
தன்னந்தனியனாய் நீர் சிங்கத்தின் வாசலிலே
தன்னினமானக் கொடி பிடித்தீர்! போனீரோ
அயவர்களால்?

தேவைக்காய் எரிந்தணையும் தென் பகுதி
விளக்குகளில் — தமிழர்
சேவைக்காய் நிதமெரிந்த அணையாத அகல்
விளக்கே!

பகிரங்க மடல் வரைந்த பேனா மை ஈரம்
காயமுன்னர்
உயிர் கவர்ந்தாரோ பாவிகள் – எம்
அஞ்சலிகள் உமக்கே ...!

துப்பாக்கி கொண்டு கொந்தளிக்கும் உணர்வடக்கும்
எண்ணத்தை
தப்பாக்கி வாழ்ந்து காட்டிய தங்கத் தமிழ் மகனே!
எப்போதினிக் காண்போம்? – சிறைகளில் வாடும்
அப்பாவித் தமிழர் துயர் துடைக்க எழுந்து நீர்
வாருமையா!

நாயாக நம் தமிழர் தலைநகரில் கண்டபடி
கைதாக
போயவரின் துயர்களையும் நாயகரே! பீரங்கி
பல கண்டும்
சாயாத உம் உடலம் கொடூரமனக் குண்டினால்
மாய்ந்ததுவோ?
ஓயாது எங்கள் உணர்வலைகள் தூயான
உம்மை நாம் மறவோம்!

— நாரதன்

## தகவல் மேடை

## கணனிகள் பிசகியதால் இப்படியும் நடந்தது

கோப்பன்ஹேகன், ஜன. 9

கணனிகளில் எதிர்பார்க்கப்பட்ட 'வை2கே' சிக்கல் பெரியளவில் அனர்த்தங்களை ஏற்படுத்தாத போதிலும் பல நாடுகளில் இது தொடர்பான பிசகுகள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் சில சுவாரஸ்யமானவை.

புத்தாயிரமாண்டின் முதல் பிரசவமாக டென்மார்க்கின் மருத்துவமனை ஒன்றில் பிறந்த குழந்தையின் வயதை அங்குள்ள கணனி 100 எனப் பதிவு செய்தது. குழந்தையின் பிறப்பு தொடர்பான விவரங்களை கணனியில் பதிவு செய்த தாதி திடுக்குற்றார். குழந்தை பிறந்த திகதியை ஜனவரி 1 — 1900 என கணனி பதிவு செய்திருந்தது.

'வை 2 கே' பிரச்சினை ஜேர்மனியில் சில வங்கி வாடிக்கையாளர்களை ஒரே நாளில் கோடீஸ்வரர்களாக்கி விட்டது.

புத்தாண்டு தினத்தன்று உள்ளூர் வங்கியில் தனது கணக்கை சரிபார்க்கச் சென்ற வாடிக்கையாளர் ஒருவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஒருசில நூறு மார்க்குகளை கணக்கில் மீதியாக வைத்திருந்த 43 வயதான அந்த வாடிக்கையாளரின் கணக்கில் 13 மில்லியன் மார்க்குகள் மீதியாக இருந்தன.

இத்தாலியில் இந்த 'வை2கே' பிரச்சினை வேறு விதமாக சிக்கலை ஏற்படுத்தியது. நேப்பிள்ஸ் நகரில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் உள்ள கணனி பிசகியது. 10 — 01 — 2000 அன்று விடுதலை செய்யவேண்டி இருந்த சில கைதிகள் 100 ஆண்டுகளுக்கு முன் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக கணனிப் பதிவு காட்டியது. சிறை அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர்.

இது போன்ற மேலும் பல சம்பவங்கள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன. (ஐ)

# மரபு பேணிய மிருதங்க அரங்கேற்றம்

**நீ**ண்டகால இடைவெளிக்குப் பின் நல்லதொரு தரம் மிக்க மிருதங்க இசை அரங்கேற்றம் இடம்பெற்றது. கலாபூஷணம் க. ப. சின்னராசா அவர்களின் சிடன் செல்வன் கிருபா அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றம் இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் இசைப் பேரறிஞர்கள், இசை இரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை அவர்களின் பாட்டுக்கு அணி செய் கலைஞர்களாக வயலின் இசைஞான திலகம் உ. இராதாகிருஷ்ணன், மிருதங்கம் செல்வன் கி. அனந்தகோபன், கெஞ்சிரா - சங்கீத ரத்தினம் திரு. மா. சிதம்பரநாதன், டோலக் - செல்வன் க. சயன், கடம் – செல்வன் நா. சிவசுந்தர் ஆகியோர் அரங்கை அலங்கரித்தனர்.

மோகன இராகத்தில் அமைந்த வர்ணத்துடன் இசைக் கச்சேரி ஆரம்பமானது. இந்நிகழ்வின் போது வர்ணத்தின் சகல அம்சங்களிலும் உடன் பாடுபவர் போன்று அனந்தகோபனின்

நாதஸ்வர வித்துவான்
**ஆர். கேதீஸ்வரன்**

மிருதங்க வாசிப்பு அமைந்திருந்தமை சிறப்புக்குரியது. கீர்த்தனைகளைப் பாடிய போது கார்வையான நாதத்துடனும், தொப்பியின் நாதம் வலந்தரை நாதத்தினை அமுக்காமலும், வேண்டிய இடங்களில் மிருதங்கத் தொனியினை மிகுத்தியும் தாழ்த்தியும் சுருதியினைக் காண்பித்தும் வாசித்தார். கீர்த்தனைகள் தொடங்கப் பெற்ற காலப்பிரமாணங்களைக் கடைப்பிடித்து உருப்படி இடங்களுக்கு ஏற்றபடி தீர்மானங்களைக் கொடுத்தும், பாட்டுக்கு எப்படி மிருதங்கம் வாசிக்க வேண்டும் என நம்முன்னோர்கள் கூறிய மரபினையும் பேணிச் சிறப்பாக வாசித்தமை குறிப்பிடத்தக்கது.

சங்கீத பூஷணம் கணபதிப் பிள்ளை அவர்கள் சிறந்த லயப்பிடிப்புள்ள ஒரு பாடகர் என்பது நாடறிந்த விடயம். கீர்வாணி இராகத்தில் அமைந்த தேவி நீயே துணை என்ற உருப்படியே நிரவல் செய்து சதுஸ்ரம், திஸ்ரம் இரண்டும் அமையப் பெற்ற சில லய நுட்பங்களை கற்பனாசுரத்தின் இடை இடையே பாடினார். வயலின் இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒத்தாசையாகச் செயற்பட்டார். இவ்வேளையில் செல்வன் அனந்தகோபன் அவற்றை ஜதிச்சொற்களாக லயம் தவறாமல் வாசித்துச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## கலைச்சுடர்

அனந்தகோபனின் குருநாதர் சின்னராசா அவர்கள் தனியாவர்த்தனத்தின் போது பல விதமான லய வடிவங்களையும் சொற்கோர்வைகளையும் முற்றும் பல அம்சங்களையும் சிடனிடம் நிறையத் திணித்து அப்படியே வாசிக்கவும் செய்து விட்டார். குருநாதர் தன்னுடைய திறமைகளை சிடனூடாக வெளிக்காட்டியமை பாராட்டுக்குரியது. உடன் வாசித்த ஏனைய கலைஞர்கள் ஒத்தாசையாக இருந்து அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றத்தை மெருகேற்றினர்.

இந்த நிகழ்வின் போது இணுவில் பதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் பரராசசேகரப் பிள்ளையார், செகராசசேகரப் பிள்ளையார் ஆகியோரைக் குறிக்கும் ராஜரே, செகராஜரே, பரராஜசேகரே, ஸ்ரீசெகராஜ, செகராஜ, ராஜ, ராஜரே எனும் சொற்பதங்களாலும் பஞ்ச அட்சரங்களைக் கொண்ட கண்டமெனும் ஐந்து மாத்திரைகளைக் கொண்ட கண்டகதியினில் அமையப்பெற்ற ஆதிதாளத்தில் இப்பல்லவியைப் பாட அனந்தகோபன் மிருதங்க இசையுடன் இசை லய வடிவுடன் வெளிப்படுத்தி வாசித்தமை சிறப்புக்குரியது. இந்த நிகழ்வு குருநாதரின் இயல், இசை, லயப் புலமையினை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

இசை ஞானமுள்ள பரம்பரையைச் சேர்ந்த அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றத்தின் போது அவர் விநாயகர் ஆலயத்தில் இசைப் பேரறிஞர்கள் முன்னிலையில் தனது திறமைகளை வெளிக்காட்டியமையும் இவரது திறமையை மேன்மேலும் வெளிப்படுத்தும் வகையில் பாடகர்களும் அணிசெய் கலைஞர்களும் செயற்பட்டமையும் பாராட்டுக்குரியது.

கலைகள் மக்களின் கலாசாரப் பண்புகளை வெளிப்படுத்தும் ஊடகங்களாகும். கலைகளை வளர்த்தெடுக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும். கலைஞர்களைப் போற்றிப் பாராட்ட வேண்டும். கலைஞர்களும் உயர்வு பெறவேண்டும். இந்த வகையில் அனந்தகோபன் குருநாதரிடம் பெற்ற ஆற்றல்களைப் பெருக்க முனைவதுடன் புதுவிதமான லய வடிவங்கள் சொற்கோர்வைகள் போன்றவற்றை முறைப்படி உருவாக்கி அகிலம் புகழும் கலைஞனாகத் திகழவேண்டும்.

★

# எண்ணமும் சொல்லும் செயலும் தூய்மைபெற

# மாசு மறுவற்ற அகத்து விளக்கு மிக அவசியம்

## அந்த அகவிளக்கிலிருந்தே சோதியுள்ள சொற்கள் வரும்

மட்டுவில் ந. நல்லதம்பி

சத்தியம் என்ற வட மொழிக்கு உண்மை, வாய்மை மெய்ம்மைஎன்றெல் லாம் பொருள் கொள்ளலாம். இவற்றுள் உண்மை உள்ளத் தில் இருந்து வருவதாகவும் மெய்ம்மை மெய்யிலிருந்துவரு வதாகவும் அமைந்திருப்பதை உணரலாம். அதாவது மனம், மொழி, மெய் ஆகிய மூன்று நிலைகளிலிருந்தும் வெளிப் படுகின்ற எண்ணமும் சொல் லும் செயலும் ஆகிய மூன்றும் தூய்மையுடையனவாயிருக்க வேண்டும் என்பதனையும் அப்போதுதான் நல்ல செயல் நடைபெறும் என்பதனையும் இச் சொற்கள் உணர்த்தி நிற் கின்றன..

இவைகளிலும் பொய்மைஇல் லாத, மாசு இல்லாத மனத் தின் கண் பிறக்கின்ற ''உண் மை''யே ஏனைய தூயசொல் லுக்கும் செயலுக்கும் காரண மாகையால் உண்மை முதலி டம் வகிக்கின்றது. 'மனத்துக் கண் மாசு இலன் ஆதல்; அனைத்து அறன்'' என்ற வள்ளுவரின் பொன்மொழி காட்டுவதும் இதனையே. இவ்விதமாக மாசு மறுவற்ற மனத்திலிருந்து வருகின்ற 'சொல் அகவிளக்காகும்; அது சோதி உள்ளது' என்று பாடு கின்றார் அப்பர் சுவாமிகள்.

இல்லக விளக்கது
இருள் கெடுப்பது;
பல்லக விளக்கது பலரும்
காண்பது;
சொல்லக விளக்கது சோதி
உள்ளது;
நல்லக விளக்கது நமச்சி
வாயவே.

என்பது அவர் பாடல்.

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

இதனையே தெய்வப் புலவ ரும் ''எல்லா விளக்கும் விளக் கல்ல; சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு' என்று கூறியிருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கது. மேலும் பொய்யா மொழிக்கு இரு வருமே 'விளக்கை' கையாண்டிருப்பது அற்புத மானது.

இனி அகத்திலே நல்ல எண் ணமில்லாமலே வாய்மையும் மெய்ம்மையும் இருக்கலாம்!

இதனையே வள்ளுவர் 'ஆகுல நீரபிற' என்று குறிப்பிடுகின் றார். ''வாய்ச்சொல்லில் வீரரடி கிளியே'' என்று பாரதி யார் பாடியதும் இதனையே ஆகும். இந்த ''வாய்மை'' யிலே பொய் இருக்கும் என் பதையும் வள்ளுவரே சுட்டிக் காட்டியுள்ளார்.

''பொய்ம்மையும் வாய்மை யிடத்த; புரை தீர்ந்த நன்மை பயக்கு மெனின்'' என்ற குற ளில் வரும் ''வாய்மை''வாயி லிருந்து தான் வந்திருக்கின் றது; உள்ளத்திலிருந்து வர வில்லை! ஆகவே ''உள்ளத் தாற் பொய்யாதொழுகிய'' ''மனத்தோடு வாய்மை மொழிந்த'' மன்னன் அரிச் சந்திரனுடைய சொற்கள் தாம் உணர்வுபூர்வமானவை; அவைதாம் சோதியானவை என்பதைப் பார்ப்போம்.

விசுவாமித்திரமுனிவருக்கும் வசிட்டமுனிவருக்கும் இடை யில் உண்டான சபதத்துக்கு அரிச்சந்திரன் உரைகல்லாக அகப்படுகிறான். சாதாரண மான சலனமற்ற வாழ்க்கை யிலே ஒருவன் உண்மை பேசிக் கொண்டு வாழ்கிறான் என்ப தில் அவ்வளவு பெரிய கஷ்டம் இருக்காது. சோதனை மேல் சோதனை கொடுத்துக் கொண்டேயிருக்கவும் அவன் தன்நிலையிலிருந்து அணுவள வும் பிசகாமல் சாதனை புரிந் திருக்கிறான் என்பதுவே பெரு மையானது.

தீமை இருந்தாலும் இல்லா விட்டாலும் பொய்யை வாய் மையாகக் கொள்ளும் அரசி யல் வாதியல்லன் அரிச்சந்தி ரன். அவன் தன்னுயிர்போல மன்னுயிர்காக்கும் வேந்தன். தமது குலக் கொழுந்தையும் பட்டத்து ராணியையும் தான் படாத கடனுக்காக விற்கின் றான். நாடாண்ட செங்கோ லால் சுடலையாள்கிறான். கையினில் உலக்கை பற்றிக் கரந்தனில் உதிரம்பாய கூலிப் பெண்ணாய் வேலை செய் கிறாள் அவன் மனைவி சந்திர மதி. விண்பொழுது போக்கி வீதியிலே சுற்றாமல் அயல் வீட்டுப் பிள்ளைகளோடு சேர்ந்து பார்ப்பானனுக்காக விறகு சுமந்து விஷந் தீண்டப் பெற்றான் இளவரசு தேவதா சன். இவர்கள் இருவரும் வாய் முணுத்தல் கண்டறியாத வேலையாட்கள்; அரிச்சந்திர னுடைய சொல்லக விளக்கின் சோதியிலே ஒளி பெற்றவர் கள்; சூரியன் ஒளி பெற்ற சந் திரர்கள்!

மேலும் சுடலையிலேகாவற் காரன் கணவன்; பிணஞ்சுட அங்கே வருகிறாள் அவன் மனைவி. கணவனுக்கன்றி வேறு யாருக்கும் தோற்றாத மங்கலநாண் அவர்களை ஒருவருக்கொருவர் அறிமுகஞ் செய்துவைக்கிறது; பிணமாக வந்த பிள்ளையோ அவர்களு டைய பிள்ளை. இந்த நிலை யிலே முழத்துண்டும் காற் பணமும் இன்றி அங்கு கிடக்

(11ஆம்பக்கம் பார்க்க)

● தேர்தலில் வெற்றி பெற்ற ஒருவர், கட்சி மாறு வதை இலகுவாக்கும் வகையிலே சட்டமொன்று ஆக்கப்பட இருக்கின்றதாம்!

★ 'ஆல் பழுத்தால் இங்கே அரசு பழுத்தால் அங்கே' என்ற போக்குடையவர்களுக்கு வாய்ப்பான சட்டம்!

● வெளிநாட்டு உதவியை மையமாக வைத்துச் செயற்படும் பெண் உரிமை அமைப்புக்கள், சாரதாம்பாள் கொலை விடயத்தில் மௌனம் சாதிப்பதாகக் கொழும்புப் பத்திரிகையாளர் ஒரு வர் கவலை தெரிவித்துள்ளார்!

★ பணம் என்றால் பெண்ணியமும் வாய் மூடுமோ?

● புலிகளுடன் பேசுவதற்கு முன், அவர்களின் ஆயு தங்கள் களையப்படவேண்டும் என்கின்றார் ஓர் அமைச்சர்!

★ ஜனாதிபதிக்கான தேர்தல் பிரசாரம் நடைபெற்ற வேளையில் இந்த நிபந்தனையை அவர் முன் வைத்திருக்கவில்லையே!

● வெளிநாட்டு நிதி உதவியைப் பெற்று யுத்தத்தைத் தீவிரப்படுத்த அரசு முயல்கின்றதென எதிர்க் கட்சித் தலைவர் கூறுகின்றார்!

★ 'பாம்பின்கால் பாம்பறியும்' என்பதா? அல்லது...?

## விடுதலைக்காக ஏங்கும் மக்களின் குரலை வெளிப்படுத்தும் கவிதை நூல்

கந்தையா ஸ்ரீகணேசன்

1940 இலிருந்து ஈழத்துத் தமிழ் நவீன கவிதை தனது வளர்ச்சியில் இன்று 6 ஆம் தசாப்தத்தில் தொடர்கிறது. வடிவம் மற்றும் உள்ளடக்க ரீதிகளில் பல்வகையான மாற் றங்களையும் கண்டு வந்துள் ளது.

வடிவ ரீதியில் மரபு நிலைப் பட்ட செய்யுள் அமைப்பிலி ருந்து வசன அமைப்புக்கு மர புக் கவிஞர்களும் மாறிய போதிலும் கவிதைக்குரிய சொல்லோசை எனும் அடிப் படையில் மாற்றம் காணாது இருப்பது சிறப்பான அம்ச மாகக் கொள்ளத்தக்கது.

இந்த வகையில் மகாகவி உருத்திரமூர்த்தி மரபு வடி வுக்குள்ளேயே பேச்சோசைப் பண்பை இணைத்து நாடகத் தன்மையைக் கவிதைக்குள் புகுத்தினார். முருகையன் ஒரு படிமேலே சென்று வாசகனை முன்னிறுத்தி கவி சொல்லும் தன்மையை அதிகம் பயன் படுத்தினார். நுஃமான் மர பின் தளையில் நின்றபோதும் வசன அமைப்பின் பலத்தில் அதிகம் நம்பிக்கை வைத் தார். மரபின் பண்பாட்டம் சங்களை அதிகம் இணைத்த வர்களாக மு. பொ, சண் முகம் சிவலிங்கம், சோ. ப. போன்றோர் காணப்பட்ட னர். சிவசேகரம், ஜெயபாலன், சேரன், யேசுராசா, புதுவை போன்றோர் மரபுப் படிமங் கள், வசன இறுக்கம், சொற் களின் இலாவகமான பயன் பாடு, கவிதையின் அரசியல் பயன்பாடு என்பவற்றுடன் புதுக்கவிதை மரபின் போக் கினையும் உள்வாங்கினர்.

90 களில் சோலைக்கிளியும் வர் தம் காலத்து கவிஞர் களும் படிமக்குளிப்புகளூடாக கவிதையின் இறுக்கத்தைக் கூட்டியபோதும், இருண்மைத் தன்மையும்புகுத்தும்ஆபத்தும் கூடவே சேர்த்துக் கொள் கின்றனர்.

உள்ளடக்கரீதியில் இயற்கை அழகை, இறைவன் அருளை வியந்து பாடும் மரபிலிருந்து.

''இன்றையகாலத்திருக்கும்
மனிதர்கள்,
இன்றைய காலத்தியங்கும்
நோக்குகள்,
இன்றைய காலத்திமுப்புகள்,
எதிர்ப்புகள்,
இன்றைய காலத்திக்கட்டு
கள்''

பாடுகின்ற கவிஞர் கள் மகாகவி முதல் தோன்றி னர்.

60, 70 களில் முனைப்புப் பெற்ற சாதிப் போராட்டம் தீர்க்கமாகவும் கூர்க்கமாக வும் கவிஞர்களின் பாடுபொரு ளாக வெளிப்பட்டது.

நூல்: 'விடுதலைக்காய்'...
ஆசிரியர்: கனகரவி..

பசுபதி எனும் கவிஞன். —

''எச்சாமத்திலும் நிச்சாமக்கண்கள் நெருப்பெறியும்'' எனப் பாடினான். காசி ஆனந் தன் முதலானோர் தமிழை யும் தமிழ் வீரத்தையும் பாடினர். எண்பதுகள் முதல் தமிழர் விடுதலையும் போராட்டமும், போர், இன வாத எதிர்ப்பு, போர் தந்த அகதி வாழ்வு, அவலங்கள் என் பன பாடு பொருள்கள் ஆயின.

அவுனியாக் கவிஞர் கனக. ரவீந்திரன் இந்த வரலாற்றுத் தொடர்ச்சியில் தமிழ் வாழ்வை வசன அமைப்பி னூடு எழுப் கவிதை வடிவில் பாடுகின்றார்.

''மனதில் பயம் ஊற்றெடுக்க
துயர்களைச் சுமந்தவராய்
துணையாகக் கடதாசி
மட்டையும்
தூக்கிச் சுமந்து செல்வர்
இருந்தும் பயன் என்ன?
இப்பொழுது தான் விடிவு
வேறாகியதே!''

காலத்தின் முரண் நிலையை யும், போரின் தாக்கத்தை யும் கவிஞன் பாடுகின்றான். ஆயுத வியாபாரம், மனித அழிவுகள் என்பவற்றின் பின் னணியில், —

### நூல் வரிசை

' நீ விடுதலைக்காய் கனவு கண்டு கொள்வதே உண்மை' என்று யதார்த்த நிலைமை யைச் சுட்டுகின்றார்.

''மனிதனிடம் மனிதம் மர ணித்துக்கொண்டிருக்க சுதந் திரக்காற்று சுமையாகத் தோன்ற'' என்பது சமகால அநியாயங்களையும் அவலங் களையும் வாசகர்களுக்கு கண் முன்னே கொண்டு வருகின் றது. இது ஆற்றொழுக்காக ' மிஞ்சும் விஞ்சும் ' எனும் கவிதையில் கூறப்படுகின்றது.

'சொந்தமாய் சொத்துக்கள்
கொஞ்சமாய்
சொந்தங்கள் பந்தமாய் —
இனிக்க
சொல்லியே வாழ்ந்தோம்'

கனக.ரவி தனது கவிதை களில் நடப்பியலை சித்திரிப் பதன் ஊடாக, மக்கள் அவ லத்தை நிதர்சனமாக எடுத் துரைக்கின்றார். அவரது படி-

(11 ஆம் பக்கம் பார்க்க)

## எதிரொலி..

- இடியன் -

● அடுத்த ஆறு ஆண்டுகளும் இருள் சூழ்ந்ததாக இருக்கும் என்கின்றார் மலையக முன்னணித் தலைவர்!

★ 'சந்திரிகா' ஆட்சி பற்றிய 'சந்திர' (சேகர)னின் ஆருடம் இது!

● 'தன்னாலேதான் சந்திரிகா வெற்றிபெற்றார்' என சிறுபான்மைக் கட்சிகள் இரண்டின் தலைவர் கள் பெருமையும் உரிமையும் கோரி வாக்குவாதப் பட்டனராம்!

★ மீச்சத்துக்கு காத்திருப்போர் இப்படிக் குலைப்பதும் கடிபடுவதும் வழக்கந்தான்!

● ஷெல்'லடிக்குப் பயந்து அவசர அவசரமாக வீட்டிலிருந்து ஓடிய தனங்களப்பு விவசாயி ஒரு வர், அடுத்த நாள் வீட்டுக்குத் திரும்பியபோது, தன்னுடைய 'ட்ராக்டர்' காணாமற்போய்விட்ட தைக் கண்டு கவலைப்பட்டாராம்!

★ 'அகதி' யாகிவிட்ட 'ட்ராக்டருக்குப் புகலிடம் அளிக் கும் சீரான வேலையை யாராவது செய்திருப்பார் கள்!

● திருடர்கள், இப்போதெல்லாம் சிறுவர்களைப் பயன்படுத்தித் தம் தொழிலைச் செய்கின்றனர்!

★ பாலமாவும் பிஸ்கட்டும் திருடப்படுவதற்குஇதுதான் காரணமோ?

● யாழ். மாநகரசபை எல்லைக்குள் இதுவரை 1,447 கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டு விட் டனவாம்!

★ நன்றியுள்ள நா...ம்!

● மாரி காலத்தில் நெடுந்தீவுக்கு வரும் சைபீரிய நாரைகள் இவ்வாண்டு இன்னமும் வரவில்லை யாம்!

★ காற்று 'விசா' வழங்கவில்லையோ?

● சமாதானத்துக்கான நோர்வேயின் முயற்சியில் முன்னேற்றம் ஏதும் இல்லையாம்!

★ சமாதானத்துக்கு No - Way! என்பதோ!

# சின்னஞ் சிறு விளம்பரம்

## புறொயிலர் விற்பனை

இறைச்சிக்கோழி புறொயிலர்[Broiler]விற்பனைக்கு எம்மிடமுண்டு. தொடர்புகளுக்கு: இல. 139, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(72520)

## ஆங்கிலம்

ஓய்வுபெற்ற நிர்வாக சேவை உத்தியோகத்தரால் ஆங்கிலம் பிரத்தியேகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் G. C. E. (O/L) G. A. Q., B. A. கற்பிக்கப்படும். ராஜேந்திரா பிஸ்கால் ஒழுங்கை, 17/4, ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணை.
(72498)

## கைமாறிவிட்டது

எனது லுமாலா பெண்கள் துவிச்சக்கரவண்டி. இணுவில் கே. கே. எஸ். கடைக்குமுன் ஒரு மாதத்திற்கு முன் கைமாறி எடுக்கப்பட்டு விட்டது. உரியவர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். டாக்டர் K. பாலசுப்பிரமணியம், இணுவில் மேற்கு, இணுவில். (இல. 2257571)
(72500)

## திருமணசேவை

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல தரப்பட்ட குறிப்புகள் உண்டு. துரிதமான இருப்திகரமான சேவை. நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. திருவிளங்கம் 90,சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (72495)

## தரகு சேவை

திருமண சேவை, காணி விற்பனைக்கு தொடர்பு:- என். கே. பிள்ளை நியூ அபிராமி 92, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். சந்திக்கும் நேரம் ஞாயிறு முழு நாளும் கிழமை நாள்களில் காலை 8—10 மணி வரை.
(72470)

## தென்னம் நாற்றுகள்

நல்லினத்தென்னம்நாற்றுக்கள் குறுகிய காலத்தில் பயன் தரக் கூடிய வத்தாவி நாற்றுக்கள் உட்பட விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை.
(72452)

## 12 இராசிப் பலன்கள்

12 இராசிகளுக்கும் விரிவான பலன்கள் எழுதப்பட்ட நூல் எங்கும் விற்பனையாகின்றது. ஆசிரியர். சோதிட ஞானி சண் —மாஸ்ரர்: விலை ரூபா — 15. வெளிநாட்டில் வாழும் உறவுகளுக்கும் பலன்கள் எழுதப்பட்டுள்ளன. ஆ. சண்முகலிங்கம், பூநாறி மரத்தடி, கொக்குவில்.
(72510)

## கல்வி 2000 ஆண்டு

முக்கிய பாடங்கள் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானத்தில் உயர்ந்த பெறுபேறடைய 6 தொடக்கம் O/L வரை Spoken English A/L பட்டப் படிப்பு வரை கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம் திருநெல்வேலி. (72448)

## விற்பனைக்கு

அண்மையில் கொண்டுவரப்பட்ட புதிய மொடல் ஹொண்டா கஸ்ரம் - 98, சுப்பர் கப் மோட்டார் சைக்கிள் பல மொடல், நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

குணம் எலக்ரிக் வேக்ஸ் 87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(72517)

## தவறிவிட்டது

மனுவேல்பிள்ளை அமலசாந்தினி (0905025488), மனுவேல்பிள்ளை டயானா (0905025011) ஆகியவர்களுடைய விசேட அடையாள அட்டைகள் யாழ்.பஸ்நிலைய பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சென். செபஸ்ரியார் கோயிலடி, மாதகல் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (72489)

சரவணமுத்து இரத்தினேஸ்வரி ஆகிய எனதுதேசிய விசேட அடையாள அட்டைகள் 29-12-99 அன்று சித்தன் கேணி பஸ்ஸில் வரும் பொழுது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். ச. இரத்தினேஸ்வரி சுதுமலை வடக்கு, மானிப்பாய். T.P.2746. (72490)

கச்சேரியடிக்கும் மானிப்பாய்க்கும் இடையில்(ஆனைக்கோட்டை வீதியில்) பச்சை நிறக்கேசுடன் மூக்குக்கண்ணாடி ஒன்று 05-01-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து விவேகானந்தன் இலங்கை வங்கி மானிப்பாய் அல்லது ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி மாவட்டக் காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். (72468)

வட்டு தெற்கு முதலி கோயிலடியைச் சேர்ந்த தம்பி முத்தன் தவராசன், திருமதி தவராசன் மனோன்மணி என்பவர்களது தேசிய, விசேட, வேலை அடையாள அட்டைகளும், ஒரு சேட், சாரம் என்பன அடங்கிய ஒரு பின்னல் (Bag) பையும் நாயன்மார்கட்டுக்கும் கச்சேரி, நல்லூரர் வீதிக்கும் இடையே தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். மாநகர சபை அலுவலகத்தில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (72523)

## SALES

New Typewriters Alder (J pan) Phoenix Sigma III (Japan) Olympia Carina-II (Japan) 154, கன்னாதிட்டி, வீதி, யாழ்ப்பாணம்.
(72485)

## மலிவுவிற்பனை

14'' T. V., டெக், பழைய படப் பிரதிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 255, அரசடி வீதி, கந்தர்மடம். (72474)

## விற்பனைக்கு

நல்லின ஐம்பது நாள் நிரம்பிய ஜெர்மன் சப்பட் நாய்க்குட்டியும் டாஸ் ஒன் நாய்க்குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 42, கந்தர்மடம், பலாலி றோட், யாழ்ப்பாணம். (72513)

$3\frac{1}{4}$' உயர திண்டுக்கல் தனிக் கதவு இரும்புப்பெட்டி (அயன் சேவ்), 311, K.K S. வீதி, கடையிலும் $2\frac{1}{4}$' உயர திண்டுக்கல் தனிக்கதவு இரும்புப் பெட்டி(அயன்சேவ்) 92, 4ஆம் குறுக்குத் தெருவிலும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ்.கே.பிள்ளை, 92 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம் காலை 9 - 4 மணி வரை. (72471)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் விடியோ சென்ரர் அளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(72351)

## நாய்க்குட்டிகள்

பொமனேரியன்நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இல. 55, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[72524)

## வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன. (புதிய பிரிவு) தொடர்பு: A.C.O. சந்தையடி ஒழுங்கை, ஆவரங்கால். (72470)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில பிற்பகல் 12.00 இல் இருந்து வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆசிரியர்: ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (72473)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 07 - 05 - 1923



உதிர்வு: 10 — 12 — 1999

### அமரர் விநாசித்தம்பி மயில்வாகனம்

10—12—1999 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (09—01—2000) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

தொட்டிவடி,
சங்கானை.
(72516)

## நல்லூர் பிரதேச சபை
## நல்லூர் / கொக்குவில் உப அலுவலகங்கள்

# ஆதனவரி அறிவித்தல் - 2000

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.15இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டுக்கானஆதனவரியை31-01-2000 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின், வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15% மும் ஏனைய ஆதனங்களுக்கு 20% மும் விறாந்துக்கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31—01—2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று, சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.


குறிப்பு:-

01. 1999 ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 2000 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.
02. சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31—01—2000 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
03. தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாக வருடாந்த வரி பற்றிய அறிவுறுத்தல் பத்திரங்கள் தாமதமானாலும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொண்டு தங்கள் வரிகளை உரிய காலத்தில் அலுவலகத்தில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**க. மணிபல்லவராஜன்**
தலைவர் (ஜே. பி. யூ. எம்.)
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
06—01—2000 (சி/10538)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி இராசலிங்கம்
(ரிங்கர் பூச்சி)

அன்னை மடியில்: 15-06-1949 ஆண்டவன் அடியில்: 10-12-1999

மாதம் ஒன்று சென்றாலும்
மாறவில்லை எம் நெஞ்சம்.
நீறு பூத்த நெருப்பாய்
நினைவு என்றும் எம்முன்
வேறு வழியின்றித் தவிக்கின்றோம்.
வேதனையை விழுங்கி நாம்
பரமனடி சேர்ந்த உம்
பாதங்களை வணங்குகின்றோம்!

**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மைத்துனர்கள்,**
**பெறாமக்கள், மருமக்கள்.**

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.
(72519)

# அறிவித்தல்

## யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்

இல. 30, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு சிகை ஒப்பனை நிலையங்கள் யாவும் (12–01–2000) புதன் கிழமை திறக்கப்பட்டு (15–01–2000) பொங்கல் தினத்தன்று மூடப்பட வேண்டும் என்பதை அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நன்றி.

(72492) செயலாளர்

---

**A Foreign Mission wishes to recruit a**

## PRESS & PUBLIC AFFAIRS OFFICER

Applications are invited from suitably qualified candidates for the post of Press & Public Affairs Officer in its Information - Section.

**Qualifications:**

A minimum of 3 G. C. E. A Levels and a distinction in English O Level.

A sound knowledge of current affairs. A background in journalism and / or human rights.

Communication skills an excellent command of written and spoken English and Tamil. Proven ability to draft copy and to translate from Tamil into English and vice verse.

Computer literate, with prior experiance of Windows NT or 95.

**Salary:**

Starting monthly salary will be in the region of Rs. 20,308.

**Application procedure:**

Applications, in writing with full CV. no more than 4 pages, must be sent by 17 January to:

MANAGEMENT OFFICER
P. O. Box: 1433, Colombo.

Applications will not be acknowledged. They should preferably have a contact number. Interviews of selected candidates will be held between 25 — 28 January. The successful applicant would be expected to start work at the end of Fabruary.

(C/10506)

---

## தையல் டிப்ளோமா பயிற்சி

வலிகாமம் தெற்கு, ஜன. 9

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தையல் டிப்ளோமா பயிற்சிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

16 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்ட— ஆகக்குறைந்தது ஆண்டு ஏழு வரை கல்வி கற்ற—வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குள் வாழும் பெண்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உடுவில் பிரதேச செயலருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும் என நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் அறிவித்துள்ளார்.

(ஐ–152)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நியமனம் செய்வதற்காக அண்மையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் அளிக்காதவர்களை நாளை 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு தென்மராட்சிகல்விவலய மாநாட்டு மண்டபத்துக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க–133)

## பாடசாலைக்குக் கட்டடங்கள்

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலை, மத்தி றோ. க. பெண்கள் வித்தியாலயம் ஆகியவற்றிற்கு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு 4 லட்சம் ரூபாவும் பெண்கள் வித்தியாலயத்திற்கு 2 லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்தன. (ஐ-111)


---

# மங்களகரமான திறப்பு விழா!



இன்று (09-01-2000) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில்
21B, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில்

## பிரியா ரெலிகொம்
## PRIYA TELECOMM



என்ற நிறுவனத்தை சேவை நோக்குடன் ஆரம்பிக்கின்றோம்.
குறைந்த கட்டணத்துடன் நிறைந்த சேவை.
ஊரடங்கு வேளையிலும் அவசரத் தகவல்களைப் பரிமாறல்
உள்நாட்டுத் தொலைபேசி இல. 021 - 3411
வெளிநாட்டுத் தொலைபேசி இல. 009421 - 3411

**கட்டண விவரம்:**

உள்நாடு: காலை 6. 00 மணி - மாலை 6. 00 மணி 1 நிமிடம் ரூபா 5.50/–
மாலை 6. 00 மணி - இரவு 10 மணிநிமிடம் ரூபா 5/-
இரவு 10 மணி - மறு நாட்காலை 6.00 மணிநிமிடம் ரூபா 4/–
ஞாயிறு - நிமிடம் ரூபா 4/-

**வெளி நாடு:**

லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், இந்தாலி, நோர்வே, கனடா, சுவிஸ், குவைத், ஓமான்.
காலை 6 மணி — மாலை 6 மணி — நிமிடம் 85/–
மாலை 6 மணி — இரவு 10 மணி — நிமிடம் 80/–
இரவு 10 மணி — மறுநாள்காலை 6 மணி—ஞாயிறு ரூபா 75/–

மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா
காலை 6 மணி — மாலை 6 மணி — நிமிடம் 70/-
மாலை 6 மணி — இரவு 10 மணி — நிமிடம் 65/-
இரவு 10 மணி—மறுநாள் காலை 6 மணி — ஞாயிறு நிமிடம் 60/–

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு
காலை 6 மணி — மாலை 6 மணி - நிமிடம் 60/-
மாலை 6 மணி — இரவு 10 மணி —நிமிடம் 55/–
இரவு 10 மணி — மறுநாள் காலை 6 மணி நிமிடம் 50/–
வெளியிலிருந்து வரும் அழைப்புக்கள் நிமிடம் 2/-
இன்றிலிருந்து பொங்கல் தினம் (15 – 01 – 2000) வரை
உள்வரும் அழைப்புகளுக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது,

(72475)

---

# மெய்யியற் கல்வி அகம்
(ACADEMY OF PHILOSOPHY)

ஆரம்பமாகிறது 09 - 01 - 2000 இல்
யாழ்/பேராதனை மெய்யியற் கற்கை நெறிகள்
**G.A.Q , B.A, B A. I, B.A. II**
வே. யுகபாலசிங்கம் (M. A. Dip - in Edu.)
46/2, கொழும்புத்துறை, சுண்டிக்குளி.
(72428)

---

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி K. P. தங்கம்மா

மலர்வு 01 - 01 - 1910
உதிர்வு 11 - 01 - 1997

திதி: 09 - 01 - 2000

ஆண்டு மூன்று சென்றாலும் உங்கள்
நினைவலைகள் எம்மை விட்டகலாது!
உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

புகையிரத நிலைய வீதி,
கொடிகாமம்.

(72416)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## ஏரம்பு பூபாலசிங்கம்

மண்ணில் 04-04-1938
விண்ணில் 10-12-1999

என்றும் எமக்கினிய தலைவனாய் நின்றவரே!
என்றும் எனது அன்புக் கணவரான தெய்வமே!
என்றும் எமைப் பாசமிகு தந்தையாய் அணைத்தவரே!
உங்கள் ஆன்ம சாந்திக்காகத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் மறவாத
அன்பு மனைவி, பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(72502)

# மக்கள் எழுச்சித் திட்டத்தின் கீழ்
# இந்த ஆண்டு 1,000 வீடுகள் அமைப்பு

மக்கள் எழுச்சித் திட்டத்தின் கீழ் (ஜன உதான) யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கடந்த வருடம் இத்திட்டத்தின் கீழ் 800 வீடுகள் அமைப்பதற்கான நிதி வீடமைப்பு அதிகாரசபையினால் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டு 300 வீடுகள் பூர்த்தியாகியுள்ளதுடன் 500 வீடுகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருவதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் (யாழ்) பொதுமுகாமையாளர் எஸ். மாசிலாமணி தெரிவித்தார்.

தேர்தல் தொகுதிகள் தோறும் நூறு வீடுகளாக பத்துத் தேர்தல் தொகுதிகளிலும் ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த வீடுகள் அமைப்பதற்காக உதவி பெறும் பயனாளிகள் விவரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக சேகரிக்கப்பட்டுவருகிறது.

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் வீடமைப்புக்கான நிதி தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் பயனாளிகளுக்கும் வழங்கப்படவுள்ளது

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 20 ஆயிரம் ரூபா கடனாகவும் 10 ஆயிரம் ரூபா நிவாரணமாகவும் வழங்கப்படவுள்ளதுடன், பிரதேச செயலர் ஊடாக 25 ஆயிரம் ரூபா நிவாரணமாக வழங்கப்படவுள்ளது. (ஐ-5-9-10)

# கரையோரப் பாடசாலைகளை இடம் மாற்றுவதற்கு முயற்சி

வலி. வடக்கு, ஜன. 9

பதற்றம் நிலவி வரும் கரையோரப் பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளை வேறுஇடங்களில் இயங்கச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் யாழ். கல்வி வலயத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயம், குருநகர் சென். யோசேப், சென். அன்ரனீஸ் பாடசாலைகள் ஆகியவற்றை வேறு பாடசாலைகளில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயத்தை அரியாலை கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் ஒரு பகுதியில் இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நேற்றைய தினம் கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயம், சென். யோசேப் வித்தியாலயம் என்பன இயங்கவில்லை. (இ-86)

## சிற்றி மிஷன்
### தொழிற் பயிற்சி நிலையம்

சிற்றிமிஷன் தொழிற் பயிற்சிகளும், தட்டச்சு வகுப்புகளும் திங்கட்கிழமை (10-01-2000) காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

– நிர்வாகம்

இல. 41, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/10540)

## பவளவிழா வாழ்த்துக்கள்

பவளவிழா நாயகி சிவத்தமிழ்ச் செல்வி

### கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்

அவர்களின் இந்து சமய திருத்தொண்டுகள் மேலும் சிறக்க எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளின் அனுக்கிரகம் கிடைக்கவேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.

''தேவரத சிற்பமணி''
''சிற்பஜோதி''

சு. இராசரெத்தினம் ஆச்சாரி.

''விநாயகர் சிற்பாலயம்'',
தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி.

(72507)

# கரபந்தாட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு, ஜன. 9

இவ்வருடத்துக்கான கரபந்தாட்டப் போட்டி வலைப்பந்தாட்டப் போட்டி என்பனவற்றை உடுவில், தெல்லிப்பழை கல்விக் கோட்டங்களில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விரு போட்டிகளும் 15, 17, 19 வயது பிரிவுகளுக்கு உட்பட்டதாகஅமைந்திருக்கும்

கோட்ட மட்டத்தில் இப்போட்டிகளை நடத்துவதற்கு உடுவில், தெல்லிப்பழை கோட்ட பாடசாலைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை ஜனவரி 14 ஆம் திகதிக்கு முன் கோட்டக்கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளை நடத்துவதற்கான நிரல்கள் தயாரிக்கும் கூட்டம் ஜனவரி 21 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு உடுவில் கல்விக்கோட்ட அலுவலகத்திலும்

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்திற்கான கூட்டம் ஜனவரி 19 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திலும் நடைபெற உள்ளன. (ஐ-152)

## யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

எதிர்வரும் 19-01-2000 ஆந் திகதி புதன்கிழமை சங்கப் பணிமனையில் மேற்படி கூட்டம் காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தரும்படியும் அழைக்கின்றேன்.

### நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்
சிறப்புரை: திரு. செ. கு. சண்முகநாதன்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர்)
தலைவர் உரை
சென்ற கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
சென்ற ஆண்டுக் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
தீர்மானங்கள்
செயலாளர் நன்றியுரை

நன்றி

கௌரவ செயலாளர்

215, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(72460)

## நன்றி நவில்கின்றோம்

### அமரர் இளையதம்பி நாகேந்திரம்

(ஓய்வுபெற்ற இறைசேரி உத்தியோகத்தர் – முன்னாள் ஸ்தாபன முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம், உரிமையாளர்; கலாஜோதி புத்தக நிலையம், சங்கானை)

எமது குடும்பத் தலைவர் 30–12–99 அன்று இறைபதம் எய்திய செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்த அன்புள்ளம் கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கட்கும் அன்றயதினம் கடையடைப்புச் செய்து கறுப்புக் கொடி பறக்கவிட்டு சோககீதம் ஒலிக்க வைத்து கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட சங்கானை வர்த்தகர் சங்கத்தினருக்கும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்ட வளர்பிறை பட்டுச்சோலை, புவிதரன் பல்பொருள் வாணிபம் உரிமையாளர்களுக்கும் மற்றும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்க உத்தியோகத்தர்கட்கும், யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கட்கும், யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கட்கும், அவரின் உயிரைக் காப்பாற்ற இறுதி வரை போராடிய யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவு வைத்திய அதிகாரிகட்கும், தாதிய உத்தியோகத்தர்கட்கும் மற்றும் எமது இல்லம் நாடி வந்த, அனுதாபத்தைத் தெரிவித்த அன்புள்ளம் கொண்ட பொது மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகன்.

7 ஆம் கட்டை, சண்டிலிப்பாய்,
கலாஜோதி புத்தக நிலையம்,
சங்கானை.

(72497)

# வீரசிங்க மண்டபம் திறப்பு விழா

கொக்குவில், ஜன. 9

வீரசிங்கம் மண்டபப் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்த நிலையில் அதன் திறப்பு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும்.

இந்த மண்டபத்தை யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் திறந்து வைப்பார். இந்த நிகழ்வில் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன், யாழ். மாவட்ட கூட்டுறவு கணக்கு உதவி ஆணையாளர் திருபதி கோ. திருநாவுக்கரசு ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்த விழாவில் வீரசிங்கம் மண்டப திறப்பு விழா பற்றிய மலர் ஒன்றும் வெளியிடப்படும். மலரில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயற்பாடுகள், கூட்டுறவுக் கல்லூரியின் வரலாறு, யாழ். மாவட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களின் வரலாறு ஆகியன இடம் பெறும். (3-69)

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## 2000 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய அறிவித்தல்

2000 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி சென்ற வருடம் (1999 ஆம் ஆண்டு) நடைமுறையில் இருந்த அறவிட்டு விகிதமே மாற்றமின்றி நடைமுறையில் இருக்கும்.

### 2000 ஆம் ஆண்டுக்கான

1 ஆம் காலாண்டுக்கான வரி
மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும்,
2 ஆம் காலாண்டுக்கான வரி
யூன் மாதம் 30 ஆம்திகதிக்கு முன்னரும்,
3 ஆம் காலாண்டுக்கான வரி
செப்ரெம்பர் மாதம்30 ஆம் திகதிக்கு முன்னரும்,
4 ஆம் காலாண்டுக்கான வரி
டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னரும்
செலுத்தப்படவேண்டும்.

### விசேட கழிவு

1. 2000 ஆம் ஆண்டின் 4 காலாண்டுளுக்குமான தொகையை 31-01-2000 இற்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு 10 சதவீத கழிவு வழங்கப்படும்.
2. 2000 ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமான தொகையைக் காலாண்டின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துபவர்களுக்கு 5 சதவீத கழிவு வழங்கப்படும்.

### தண்டம்

குறிப்பிட்ட காலாண்டுக்கான வரியை அக்காலாண்டு முடிவடைவதற்கு முன் செலுத்தப்படாதவிடத்து,

1. வெற்றுக் காணிகளுக்கும் குடியிருப்பு ஆதனங்களுக்கும் 15 சதவீத தண்டமும்
2. வியாபார நோக்கத்துக்கான ஆதனங்களுக்கு 20 சதவீத தண்டமும் அறவிடப்படும்

### வரிவிலக்கும் ஆட்சேபனையும்

சேதமடைந்துள்ள, காலியாகவுள்ள ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டும் விதிக்கப்பட்ட ஆதனவரிக்கெதிரான ஆட்சேபனையின் பொருட்டுமான எழுத்துமூல விண்ணப்பங்கள் 31-01-2000இற்கு முன்னர் எனக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1999 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்தவாறே வியாபார மலகூடக் கட்டண விகிதங்களே 2000 ஆம் ஆண்டிலும் நடைமுறையில் இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

வரியிறுப்பாளர்களுக்குச் சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு இவ் வரி நிலுவைகளைச் செலுத்தி எமக்குப் பூரண ஆதரவு தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ம.க. சிவாஜிலிங்கம்
தலைவர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
03-01-2000

(சி/10542)

## எண்ணமும்....

(ஏழாம் பக்கத் தொடர்)

கும் குறைக் கொள்ளியிலே பிணத்தைச் சுட்டால் என்ன குடி முழுகியா போய்விடும்?.

''பொய்ம்மையும் வாய்மையிடத்த'' என்று வள்ளுவரையும்சாட்சிக்குஅழைக்கலாமே: ஆனால் அரிச்சந்திரனான காவலாளி அதைச் செய்திலன்.

அன்றியும் அரசனது மகனைக் கொன்று ஆபரணங்களையும் திருடினாள் என்று கொல்லாத கொலைக்கும் திருடாத திருட்டுக்கும் குற்றஞ் சாட்டப்பெற்றுக் கொலைக் களத்திலே கொலையை நிறைவேற்றக் காத்து நிற்கும் தனது கணவனின் வாளுக்குக் கீழே தன் கழுத்தைக் காட்டி எந்தநிலையிலும் சத்தியம் தவறக் கூடாது எனத் தன் கணவனுக்கு ஆறுதல் கூறி நிற்கிறாள் சந்திரமதி.

### ஒரு பொய் சொல்வாயா?

இந்தப் பயங்கரமான சூழ்நிலையிலாவது மனம் பேதலித்து ஒரு பொய் சொல்வ் மாட்டானாஎன்றஅங்கலாய்ப்பில் அவசர அவசரமாக அவ்விடம் வருகிறார் விசுவாமித்திரர். ''இது வரை நீ இழந்தவற்றையெல்லாம் மீட்டுத்தருகிறேன்; ஒரு பொய் மட்டும் சொல்லு'' என்று அழாத குறையாகக் கேட்கிறார்.

அப்பொழுது அரிச்சந்திரனோ.....இனி நமக்கு உள்ளதென நினைக்கும் கதியிழக்கினும் சட்டுரை இழக்கிலோம் என்கிறான். எல்லாவற்றையுமே இழந்து விட்டோம். இனி இறந்தபின் நமக்கு என்ன கதி நேருமோ தெரியாது. அவ்விதம் வரும் என்று நினைக்கும் அந்தக் கதியை நாம் இழக்கவேண்டி வந்தாலும் சத்தியத்தை இழக்க மாட்டோம் என்று உறுதியாகச் சொல்லுகிறான்.

தனது சத்திய விரதத்தில் சேர்ந்து கொண்ட மனைவியையும் பிள்ளையையும் சேர்த்து ''சட்டுரை இழக்கிலோம்'' என்று பன்மையில் சொன்ன சொல்லும் சோதி உள்ளது. உண்மை பேசி உயர்ந்து நிற்கிறான் அரிச்சந்திரன். உண்மைக்கு அரிச்சந்திரன் என்ற சொற்றொடரும் சோதி பெறுகிறது.

அரிச்சந்திரனுடைய இந்தக் கதையை நாம் எல்லோரும் அறிவோம். ஆயினும் நமது காலத்தில் வாழ்ந்து செயற்கரிய செயல் புரிந்து மறைந்த மகாத்மாகாந்தி(ஜி)அவர்கள் அரிச்சந்திரன் கதை தன்னைச் சத்தியசீலனாக மாற்றியதாகச் சொல்லியதைநாம் உணரவேண்டும். பெரியோர்களுடைய வாழ்க்கை முறைகளைக் கற்று நாமும் வையத்துள் வாழ்வாங்கு வாழ முயலவேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவர் மகாத்மாகாந்திஜி என்பதை நாம் நினைவிற்கொள்வோமாக.

''உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்'' என்ற குறள்நெறிக்கு அரிச்சந்திரன் புராண புருஷனாக மகாத்மாகாந்திஜி நவீன புருஷனாகவும் விளங்குகிறார்கள்.

எனவே. எழுதா மறைகளான வேதங்களும் திருக்குறள் நாலடியார் போன்ற நீதி நூல்களும் மூவர் தமிழும். பிரபந்தங்களும் பதினெண் புராணங்களும் பாரத. இராமாயண காப்பியங்களும் ஆகிய எல்லாம் அவற்றைப் பாடிய மகான்களுடைய அக விளக்கின் சோதியுள்ள சொற்களே ஆகும் என்பதனை உணர வேண்டும். அவை மேலும் மேலும் எத்தனையோ அக விளக்குகளிலிருந்து சோதியுள்ள சொற்களை ஆக்கிக் கொண்டிருக்கின்றன என்பதனையும் அறிவோமாக ★

## கீதையைத் தந்த. ,

(6ஆம் பக்கத் தொடர்)

''மத்தளம் கொட்ட வரி
சங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரை
தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன்நம்பி மதுசூதனன்
வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்
கண்டேன் தோழி''

அவளின் கனவு நனவாகியது. பங்குனி உத்தரத்தில் திருமால் வில்லிபுத்தூர் வந்து அவளைத் திருமணம் முடித்து அழைத்துச் சென்றார் என்பதை பெரியார் வாக்கிலும் புராணங்கள், குருபரம்பரைக் கதைகள் வாயிலாகவும் அறிய முடிகிறது.

''கார்குழல் அணங்கைக் கண்ண பிரான் கைப்பிடித்தான்'' என்று கூறும் நம்பி தாசர் வாக்கிலும் கோதையின் இலட்சியம் நிறைவேறியமை தெளிவாகின்றது.

தம்மை உள் அன்போடு வழிபடும் ஒவ்வொரு ஜீவாத்மாவையும் பரமாத்மா தேடி ஏற்றுக் கொள்வார் என்பது நிச்சயம். மார்கழி மாதம் பாவை நோன்பு நோற்பது மிகவும் மகத்தானது. எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமெனத் திருமாலை இறைஞ்சி இந்த நோன்பை நோற்று நிறைவேற்றினால் அந்த இலட்சியம் நிச்சயம் வெற்றி பெறும். அஃதுவெற்றி பெற பகவான் விஷ்ணு துணை புரிவார். ஆகவே, திருமாலைப் பக்தியுடன் வழிபட்டு முத்தி நிலை அடைய உறுதி பூணுவோமாக.

## விடுதலை....

(7 ஆம் பக்கத் தொடர்)

மப்பயன்பாடு நவீன கவிதையின் ஓட்டத்தை சிறப்புடன் எடுத்துக் காட்டுகிறது.

''மனிதத்தை ஏழையாக்கவோ'' எனும் தொடர் மூலமும் 'கிராமம் இழிந்திருக்குமோ' எனும் பாவனை தருகின்ற மனக்காட்சி மூலமும் சமகாலக்காட்சிகள் இறுக்கமான பதங்களின் தொடர்களால் விளக்கப்படுகின்றன.

கவிதையில் மொழியின் பாவனை, சற்றுக் கோஷத் தன்மையுடன் இருக்கின்றது எனும் விமர்சனம் கனக. ரவியின் கவிதைகளில் சிலவற்றுக்குப் பொருந்தும். எனினும் அவர் எடுத்துக்கொண்ட பாடுபொருள் மக்கள் நலம் சார்ந்த, முற்போக்கான ஒன்று எனப்படுவதால் கனக. ரவியின் கவிதைகள் சமகால ஈழத்துக் கவிதை உலகில் முக்கியம் பெறுகின்றன.

அவரது கருத்து நிலை பற்றிக் கவிதைகளுக்குள் தேடினால் அது மக்கள் நலம் சார்ந்த ஒன்றாக இருப்பதை அவரது வரிகளிலேயே காண முடிகின்றது.

'மக்களே மாபெரும் சக்தி
மக்களே வெற்றி காண்பீர்
மக்களே உண்மைக்காய்
குரல் கொடுப்பீர்
மக்களே அடிமை
விலங்கொடிப்பீர்
மக்களே ஒன்றாக எழுவீர்'

மேற்குறிப்பிட்ட வரிகள் கனக. ரவி என்னும் கவிஞன் தனது காலகட்ட வாழ்வினூடாகச் சிந்தித்து மக்களிடம் விடுக்கும் வேண்டுகோள். இதுவே ஒருகவிஞனின் சமூகக் கடமையும் ஆகின்றது. ★


''விராட் விஸ்வப் பிரம்மனே நம''

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

## கந்தையா சுப்பிரமணியம் ஆச்சாரி

(காளி அம்மன் கோயிலடி, உடுவில்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 11 - 1922 | 11 - 12 - 1999 |

எங்கள் அன்புத் திருவுருவின் மறைவின்போது நேரில் கலந்தும் கடித மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் (10—01—2000) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வீட்டுக்கிருத்தியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் நண்பகல் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினர்.

காளி அம்மன் கோயில்,
உடுவில். (72531



# வணிகப் பிரமுகர்களே!

எம்மிடம் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட **அப்பியாசக் கொப்பிகள், C. R. கொப்பிகள், என்வலப் வகைகள், மனேஜ்மென்ற் டயறிகள்** என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். இவற்றைத் தொகையாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

## சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. 2567 (72528).


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமணி ஐயாத்துரை

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசமணி ஐயாத்துரை 07–01–2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், சந்திரவதனா (கனடா), மனோரஞ்சித மலர், இராமச்சந்திரா R. M. C. வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், மெய்யழகன் (ஓய்வு பெற்ற அதிபர்), ஜெசுராஜன் (தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி), இந்திரமதி (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிகலா (பிரான்ஸ்), மேகலா (கனடா), குகன் (பொறியியலாளர் — சிங்கப்பூர்), அச்சுதன்) (பிரான்ஸ்), ஜெயகலா (கனடா), றவி புவிராஜசிங்கி (பிரான்ஸ்), கந்தசாமி (கனடா), சுஜனி ஜொபிற்றா, ஜீவன் (மாணவர்கள், சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ஜஸ்ரின், ஜொய்ந்தன் (டிறிபேக் கல்லூரி) ஜெரால், ஜூலியன், ஜோய், (அ. மி. த. க. பாடசாலை மட்டுவில்,) நிருஷா, தர்ஷா, துளஷா, கௌஷா (மாணவர்கள், மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிங்ஸ்ரன், றான்ரி ஸ்ரீபன், மறீன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(9-1-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மட்டுவில் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஐ. இராமச்சந்திரா
(மகன்)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(72508)

## திருமதி மேரி யோசப்பின் சின்னையா சிங்கராயர்

கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 146, பாங்ஷால் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரியோசேப்பின் சின்னையா சிங்கராயர் நேற்று (08 - 01 - 2000) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சிங்கராயரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை – அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், பிரான்சிஸ்கம்மா (விமலா), வலன்ரீனா (ராணி), றோஸ் செலஸ்ரின் (ராஜகுமாரி), அந்தோனிப்பிள்ளை (ஹொலண்ட்), பெனடிக்ற் சிறில் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை யோன் கிங்சிலி (ஜேர்மனி) ஞானப்பிரகாசம் மற்றும் ஜெ[illegible] (ஹொலண்ட்), தயா (கனடா), ஜோர்ச் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09 - 01 - 2000) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு(புதிய நேரம்) புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வலன்ரீனா
(மகள்)

146, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். (72522)

# ஜனநாயக ஒளி அணைந்தது

# குமார் பொன்னம்பலம்

தன் தேசம், தன் மொழி, தன்னினம் இவற்றுக்காக உழைத்த உலக உத்தமர்கள் வரிசையில்
மகாத்மா காந்தி, மாட்டின் லூதர் கிங் போன்ற மகத்தான உயிர்த் தியாகிகள் வரிசையில்
**தமிழர் தலைவர் குமார் பொன்னம்பலம்** அவர்கள் இடம்பெற்று விட்டார்.

குன்றிலிட்ட தீபமாக, அணையாத தியாகச் சுடரொளியாகத் தமிழ் நெஞ்சங்களில் அவர் பிரகாசிக்கின்றார். தமிழ் மக்களுக்காக உழைத்து, தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து, தமிழ் மக்களுக்காகவே மடிந்த மக்கள் தலைவர்

**மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு
எங்கள் கண்ணீரஞ்சலிகளை உரித்தாக்குகின்றோம்.**

**- அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்**

(சி/10549)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.9

கந்தர்மடம் வேதாந்த மடத்தில் இன்று காலை 9.30 மணிக்கு திருவாசகமுற்றோதல் நடைபெறவுள்ளது.

## காயமடைந்த.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) (வயது 45) - மன்னார்.

* ஜோன் கெனத் (வயது 32) - வவுனியா.
* மாணிக்கம் றட்ணேஸ்வரன் (வயது 31) - முல்லைத்தீவு.
* லோசியஸ் யூட் ஜெயசீலன் (வயது 28) - வவுனியா.
* பாலகிருஷ்ணன் கிருஷாந்தன் (வயது 23) - குருமன்காடு, வவுனியா.
* பரமலிங்கம் பரமேஸ்வரன் (வயது 25) - காரைநகர்.
* சோமசுந்தரம் சிவனேஸ்வரம் (வயது 43) - ரத்மலானை.
* சிவலிங்கம் குகனேஸ்வரன் (வயது 34) - கண்டி.
* சபாரத்தினம் சசிகுமார் (வயது 25) - பெரிய தம்பனை, வவுனியா.
* செல்வமகேந்திரன் ஆனந்தரூபன் (வயது 17) - பெரியமடு, மன்னார்.
* எட்வேட் ஜோன்சன் (வயது 23) - பாலம்பிட்டி, மன்னார்.
* ஸ்ரீசத்தியானந்தராசா ஸ்ரீகணேசன் (வயது 21) - கச்சாய் வடக்கு, கொடிகாமம்.
* கதிரவேலு ஹட்சன் (வயது 28) - நீர்கொழும்பு.
* சண்முகராசா தர்மலிங்கம் (வயது 47) - பூவரசங்குளம், வவுனியா.
* சுப்பிரமணியம் கந்தசாமி (வயது 23) - இன்புல்பிட்டிய.
* சோமசுந்தரம் பாலசுப்பிரமணியம் (வயது 44) - மாத்தளை.
* சுப்பிரமணியம் கேதீஸ்வரன் (வயது 32) - ஹற்றன்.

7ஆம் திகதி காயமடைந்தவர்கள்:

* பழனி முத்து புனேஸ்வரன் (வயது 25) - கொட்டகல.
* போசன் முரளிதரன் (வயது 29) - கொழும்பு 15.
* கிட்ணன் முருகானந்தன் (வயது 33) - ஆவரங்கால் புத்தூர்.

ஏனைய 15 பேரின் பெயர் விவரங்கள் நேற்றைய சஞ்சீவியில் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

# குமார் கொலைக்கு ஈ.பி.டி.பி கண்டனம்

கொழும்பு,ஜன.9

குமார்பொன்னம்பலத்தின்கொலையைக்கண்டித்து ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ்தேவானந்தா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான திரு. குமார்பொன்னம்பலத்தின் கொடூரக்கொலை பண்புடைய யாவராலும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும். அரசியல் பிரச்சினைகளைக் கொலைகள் மூலம் தீர்க்க முடியாது என்ற ஜனநாயகப் பண்பில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. இக்கொலையை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஈழமக்கள்ஜனநாயக கட்சிக்கும் குமார்பொன்னம்பலத்திற்கும் அரசியல் ரீதியாகக் கருத்தொற்றுமை இருக்கவில்லை. பல தருணங்களில் அவர் எமது கட்சியின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்துள்ளார். அது அவருடைய ஜனநாயக உரிமை என்றே நாம் கருதுகின்றோம்.

களுத்துறைச் சிறைச்சாலையில் நான் கோழைத்தனமாகத் தாக்கப்பட்டு தேறிவரும் வேளையில் சுகம் விசாரிக்க நேரில் வந்து என்னைப் பார்த்தது மட்டுமல்லாமல், அநாகரிகமான அச்சம்பவத்தை கண்டித்ததோடு தாக்கியவர்களுக்கு ஆதரவாக தான் வழக்குப்பேசமாட்டேன் எனவும் எனக்கு உறுதி அளித்துச் சென்றார்.

கடந்த சில வருட காலமாகத் தமிழர் மத்தியில் ஒரு புதிய கலாசாரம் வளர்ந்து வந்ததை நம்மில் பலர் உணர்ந்து கொள்ளவில்லை. பாசிச ஆட்சிக்கு அடிக்கல் நாட்டவேண்டுமானால் புத்திஜீவிகளும், ஜனநாயகவாதிகளும் அழித்தொழிக்கப்படவேண்டுமென்பதே அந்தக் கலாசாரம். அந்தக் கலாசார பரிமாண வளர்ச்சியின் மற்றுமொரு நிகழ்வே குமார் பொன்னம்பலத்தின் படுகொலையாகும்.

தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக அரசியல் தலைவர்களை படுகொலை செய்யும்அநாகரிகமான அரசியல் படுகொலைகளை யார் செய்தாலும் அவர்களை துணிவோடு கண்டிக்கத்தமிழ்மக்கள் முன்வரவேண்டும். கருத்துக்களை ஆயுதங்களால் எதிர்கொள்ளும் அரசியல் கயமைத்தனத்தைஒழிக்கநாம் ஒன்றுபட்டு குரல் கொடுப்போமாக.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## ரெலோ கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

படுகொலை செய்யப்பட்ட தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் செயலதிபர் குமார்பொன்னம்பலத்தின் இறுதிக்கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறுவதனை ஒட்டி இன்றைய தினத்தை தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வேண்டுகோள் விடுத்துள்ளது.

ரெலோ முதல்வர் என்.சிறீகாந்தா இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கோழைத்தனமும் துரோகமும் நிறைந்த இந்த அரசியல் படுகொலை அரசியல் அதிகாரவலிமை கொண்ட சக்திகள் சிலவற்றால் நன்கு திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கைதானோரில்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பாரிய தேடுதல் நடவடிக்கையின் போது இரண்டாயிரத்து 125 தமிழர்கள் கைது செய்யப்பட்டு மருதானை, பம்பலப்பிட்டி, மொறட்டுவ போன்ற இடங்களிலுள்ள நான்கு பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களிலேயே 50 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சிலவாரங்களாக கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்தே இந்தத் தேடுதல் வேட்டை இடம்பெற்றது என்று கொழும்பு மாவட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை கண்டிப்பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டவர்கள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## பூஸாவுக்கும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுத்துறைச் சிறைச்சாலை தவிர்ந்த நாட்டின் பல சிறைச்சாலைகளில் இடநெருக்கடி நிலவுவதாலும் கைதிகளுக்கு பாதுகாப்பு இராது என்று கருதப்படுவதனாலும் களுத்துறைச் சிறைச்சாலைக் கைதிகளை பூஸா முகாமுக்கு மாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## நோர்வே........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாடுவதற்கு அவர் தனது விஜயத்தின் போது திட்டமிட்டிருந்தார்.

இலங்கையில் 15ஆம், 16ஆம் திகதிகளில் தங்கியிருந்து இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஆராய்ந்த பின்னர் அது தொடர்பானமுன் முயற்சிகளை மேற்கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நோர்வேவெளிநாட்டமைச்சர் நலமடைந்து நாடு திரும்பியதும் அவரது இலங்கை விஜயம் இடம் பெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இறுதிக் கிரியை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பலியாகிவிட்டார்.

குமார்பொன்னம்பலம் அவர்கள் அரசியல் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடனும் உறுதியுடனும் மனித நீதிக்காக குரல் எழுப்பி வந்தவர். சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரினவாதத்துக்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்த போதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

குமார்பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றாளர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமை பெற்று சுதந்திர நாடாக உருவாகவேண்டுமென ஆவல் கொண்டவர். ஆயுதப்போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும் எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல் கொடுத்து வந்தார். நேர்மைத் திறமையுடன் அபாரமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது.

குமார்பொன்னம்பலம் அவர்களின் இனப்பற்றுக்கும் விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து அவரது நற்பணியைக் கௌரவிக்குமுகமாக 'மாமனிதர்' என்ற அதிஉயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்து விடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-8)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் வீதிஅபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்று பொறியியலாளர் காரியாலயத்தில் R.M.C ஆக கடமைபுரியும் திருவாளர் ஐயாத்துரை இராமச்சந்திரா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராசமணி ஐயாத்துரை**

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நிறைவேற்றுப் பொறியியலாளரும் சக உத்தியோகத்தர்களும்.**

**நிறைவேற்று பொறியியலாளர் காரியாலயம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம்.**

(C/10552)



# வாழ்த்துகின்றோம்

76ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் அன்னை

**சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P**

புத்தாயிரம் ஆண்டில் புதுவாழ்வுக்கான ஆதரவற்ற அன்னையர்க்கு விடுதி அமைத்தாயே தங்கத்தாயே வாழ்க பல்லாண்டு

மடத்தடி, மாவிட்டபுரம்.

கந்தப்பிள்ளை செல்வநாயகம் குடும்பத்தினர்.

(C/10551)



# துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்கள்

76ஆவது அகவையில் காலடி எடுத்துவைக்கும் இந்நாளில் மேலும் தொண்டுகள் சிறக்க பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை, நீர்வேலி.

த.பரராஜசிங்கம் J.P செயலாளர்.

(C/10550)



2003இல் பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமா? அமைதியான சூழலில் சிறப்பான ஆசிரியர்கள்!

## A/L 2002 கலைப் பிரிவு

தமிழ் : அருந்தா
LOGIC : S.S.மனோகரன்
இந்துநாகரீகம் : MR
புவியியல்/வர : திருக்குமார்

## 2002 விஞ்ஞான, கணிதப்பிரிவு

இணைந்த கணிதம்: அம்பி
இரசாயனம் : அன்பு
பௌதிகம் : கருணாநிதி : லோகா
உயிரியல் : லோகேஸ்

# சயன்ஸ் அக்கடமி

நல்லூர்

## 2001 வர்த்தகப் பிரிவு

கணக்கீடு : பாலவாசன் (கட்டுப்பாட்டுக் கணக்கு)
வணிகக்கல்வி : முகுந்தன்
பொருளியல் : ஞானேஸ்வரன்

ஆரம்பம்: 11-01-2000 6.20 A.M

(72538)



எமது புதிய வீடியோCD வெளியீடு

சாய்குமார் நடித்த

※ நாகபந்தம் ※

பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.

எம்மிடம் புதியபட போஸ்ரர்களும் வீடியோ CD கவர்களும் விற்பனைக்குண்டு.

**சுப்பஸோ வீடியோ**

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/10554)


# மரண அறிவித்தல்கள்

## சிவசம்பு ஆனந்தநடராசா (மண்டைதீவு)

மண்டைதீவை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு ஆனந்தநடராசா நேற்று (8.1.2000) காலமானார்.

இவர் சிவசோதியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - யோகம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிந்தாமணி - பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் வசந்தரூபன்(கொழும்பு), தயாளன்(கனடா), ஜெயந்தன்(சுவிஸ்), சுதர்சன்(கனடா), முகுந்தன்(ஆசிரியர்), திலீபன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ரஞ்சினிதேவி மற்றும் கமலினி(கனடா), சிவாஜினி(சுவிஸ்), கௌசல்யா(கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜபன், சுஜீபன், நல்லுஜன் ஆகியோரின் பேரனும் திருமதி மங்கையற்கரசி, மகேஸ்வரி, பவானி ஆகியோரின் சகோதரனும் திருமதி இராசகுலநாயகி, திருமதி யோகநாயகி, காலஞ்சென்ற நடேசமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை, சண்முகலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2000) கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

59/1 மூர்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06. T.P: 500536

ஆ.சன்முகலிங்கம் (சகலன்) 23, நக்கா றோட், மனோன்மணி அம்மன் வீதி, நல்லூர்.

(72539)

## துரைசிங்கம் ஸ்ரீபத்மநாதன்

(இளைப்பாறிய காசாளர் B.C.C Lanka Ltd)

பண்ணாகம் சுழிபுரத்தை சேர்ந்த துரைசிங்கம் ஸ்ரீபத்மநாதன் (நேற்று) 8.1.2000 சனிக்கிழமை காலமானார். அன்னார் உமாதேவியின் அன்புக் கணவரும் பதுமா, பத்மினி, மகிந்தா(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்பிரதேச செயலகம் சங்கானை), ஸ்ரீபிரதீப்(கணிதப் பிரிவு மாணவன் A/L 2000 யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. எ.செல்வநாயகம்(அரசினர் வைத்தியசாலை சங்கானை) அவர்களின் மாமனாரும் உமாசங்கரின் பேரனும், சந்குணசிங்கம்(மலேசியா), கனகபூசணம்(கனடா), மனோண்மணி, பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9.1.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் திருவடிநிலை மயானத்தில் நடைபெறும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள் மருமகன்.

விசவத்தனை, பண்ணாகம், சுழிபுரம்.

(72538)

## காமாட்சி ஆச்சாரி ராஜி ஆச்சாரி

இந்தியா, தமிழ்நாட்டை பிறப்பிடமாகவும் யாழ். கன்னாதிட்டியில் வசித்தவருமாகிய ராஜு ஆச்சாரி கொழும்பில் காலமானார். அன்னார் பாலாமணியின் அன்புக் கணவரும் மோகனசந்திரன், பாலாம்பாள் திருச்செல்வம்(கணேசன் ஜேர்மனி), யசோதாதேவி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யாழ்ப்பாணம் மா.தங்கவேல் ஆச்சாரியின் (சோதிடர்) மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.01.2000 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை ஆழ்ந்த துயரத்துடன் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:

44/1 யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

மா.தங்கவேல்ஆச்சாரி (சோதிடர்) (குடும்பம்) (மைத்துனர்)

(72537)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.